ilakku.org

# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 302 | சனி, ஆகஸ்ட் 31, 2024 | 16 பக்கங்கள்


# தென்னிலங்கை விஞ்ஞாபனங்கள்



# தமிழர்களுக்கு சொல்லும் செய்தி!

— அகிலன்

## தரகுநிலை அரசியல் தவிர்க்கப்பட வேண்டும்

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன்



## பூகோள வெப்பமாதலால் உயரும் கடல் மட்டமும் அதனால் பாதிக்கப்படும் பசிபிக் நாடுகளும்

— தமிழில்: ஜெயந்திரன்




© 2024 இலக்கு இணையம்

# கொழும்பு பாதுகாப்பு கூட்டுக்குழுமத்தின் செயலகம் அமைக்க புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து



கொழும்பு பாதுகாப்பு கூட்டுக்குழுமத்தின் உறுப்பு நாடுகள் கொழும்பு பாதுகாப்பு கூட்டுக்குழுமத்தின் செயலகத்தினை அமைக்க புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் சாசனத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இந்த நிகழ்வுகள் இலங்கை அரசாங்கத்தால் கொழும்பில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் , கே.சி, மாலைதீவு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு இப்ராஹிம் லத்தீப் DC (Retd.), Lt. Col (Retd.) மொரீசியஸ் குடியரசின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் ஹய்மந்தோயல்திலும் மற்றும் இலங்கை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கா ஆகியோர் குறித்த உறுப்பு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த ஆவணங்களில் கையெழுத்திட்டுள் ளனர்.

உறுப்பு நாடுகளின் பொதுவான கவலைகள் குறித்த சவால்கள் மற்றும் நாடுகடந்த அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை முறியடித்து பிராந்திய பாதுகாப்பினை மேம்படுத்துவதே இந்த கொழும்பு பாதுகாப்பு கூட்டுக்குழுமத்தின் முக்கிய இலக்கு எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேற்கு கரையில் இஸ்ரேலின் படை நடவடிக்கை – 646 பொதுமக்கள் பலி



இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேலியப் படையினர் கடந்த புதன் கிழமை(28) ஆரம்பித்த மிகப்பெரும் படை நடவடிக்கையில் கடந்த வியாழக்கிழமை(29) வரையில் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக பாலஸ்தீனத்தின் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் விமானங்கள், வீடுகளைத் தகர்க்கும் இயந்திரங்கள், கவச வாகனங்கள், ஆளில்லாத தாக்குதல் விமானங்கள், உலங்கு வானூர்திகள், சகிதம் நூற்றுக் கணக்கான படையினர் இந்த தாக்குதலை ஆரம்பித்திருந்தனர்.

கடந்த 20 வருடங்களின் பின்னர் அந்த பகுதியில் இஸ்ரேலிய படையினர் மிகப்பெரும் தாக்குதலை ஆரம்பித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நடவடிக்கையின் போது பர்ரா என்ற அகதி முகாமில் இருந்து மக்களில் 4 பேரை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஈழத்தைச் சேர்ந்த புகலிடக்கோரிக்கையாளர் அவுஸ்ரேலியாவில் தற்கொலை



இலங்கை - புத்தளத்தைச் சேர்ந்த தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் மனோகரன் யோகலிங்கம் அவுஸ்திரேலியாவில் தனக்கு தானே தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இது குறித்து தமிழ் அகதிகள் பேரவை மேலும் தெரிவித்துள்ளதாவது, தன்னைத் தானே தீக்கிரையாக்கிய 23 வயதேயான இந்த இளைஞனை அவுஸ்திரேலியா அரசாங்கமும், அரசாங்கத்தின் அகதிகள் மீதான மோசமான கொள்கைகளுமே படுகொலை செய்துள்ளது.

அவனது மரணப்படுக்கையின் கடைசி நொடிகளில் அவரோடு கூட இருந்த ரதி கூறியது இதுதான். “பல எதிர்கால கனவுகளோடும், வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற லட்சியத்தோடும் வாழ்ந்த 23 வயதான இளைஞன் மனோ. உள்நாட்டுப் போரில் பாதுகாப்புத் தேடி அவுஸ்ரேலியா வந்தார்.

ஒரு இளைஞனை இந்த நாட்டின் மனிதத் தன்மையற்ற அகதிகளுக்கு விரோதமான போக்கு, அதன் மூலம் அவன் சந்தித்த தனிப்பட்ட, சமூகப் பிரச்சனைகள் வாழ்வின் மீதான நம்பிக்கை இழக்கச் செய்ததோடு இனி வாழ்வதே வீணென்று இத்தகைய பாரதூரமான முடிவை எடுக்கச் செய்துள்ளது.

கடந்த 12 ஆண்டுகளில் எத்தனையோ அப்பாவி அகதிகளின் அகால மரணங்களை நாங்கள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மலையக அபிவிருத்திக்கு முன்னுதாரணம் மிக்க தலைவர் தேவை

மலையகம் பல்வேறு வழிகளிலும் இன்று தடம்புரண்டு போயுள்ள நிலையில் மக்களை ஐக்கியப்படுத்தவும், மலையகத்தை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவும் முன்னுதாரணம் மிக்க தலைவர் ஒருவர் அவசியமாகும்.

அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பால் சமூகத்தைப் பற்றி சிந்திக்கின்ற தலைவர்களையே மக்கள் முதன்மைப்படுத்த வேண்டும் என்று பேராதனைப் பல்கலைக் கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.சோபனாதேவி தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், மலையக மக்கள் இந் நாட்டிற்கு வருகைதந்து 200 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. எனினும் அவர்கள் இன்னும் இந் நாட்டில் அபிவிருத்தி குன்றிய ஒரு சமூகமாகவே இருந்து வருவது வேதனையளிக்கின்றது. இந்நிலையில் அவர்களின் தனித்துவத்தன்மை பேணப்பட்டு அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும். எனினும் ஆட்சியில் அமரும் அரசாங்கங்கள் இது குறித்து சிந்தித்து செயற்படுவதாக இல்லை.



பேரினவாத சக்திகளின் காய் நகர்த்தல்களுக்கு மத்தியில் ஒடுக்கப்பட்ட

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# உலகத்தை காப்பாற்ற அணுவாயுதம் தேவை – சீனா

மிகப்பொரும் விண்கற்களின் (asteroids) தாக்குதலில் இருந்து பூமியை காப்பாற்றுவதற்கு நவீன அணுவாயுதங்கள் தேவை அவற்றை நாம் விரைவாக தயாரிக்க வேண்டும் என சீனாவின் விண்வெளியின் ஆழமான பகுதிக்கான ஆய்வு (Deep space exploration program) என்ற நிறுவனத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் SCIENTIA SINICA Technologica என்ற விஞ்ஞான சஞ்சிகையில் எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளனர்.



விண்ணில் இருந்து வரும் ஆபத்துக்களை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக வேண்டும். அவற்றை சரியாக கணித்து அழிக்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும். வெவ்வேறு அளவுகள் கொண்ட விண்கற்கள், அவற்றின் வேகம், அவை பூமியை தாக்குவதை கண்டறிந்து வழங்கப்படும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பாலஸ்தீன மக்களின் பணத்தை பைனான்ஸ் நிறுவனம் திருடியது

இஸ்ரேலின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பாலஸ்தீன மக்களின் பணத்தை பைனான்ஸ் (Binance) எனப்படும் கிறிப்போகரன்சி நிறுவனம் திருடியுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.



பக்ஸ்புல் (Paxful) எனப்படும் கிறிப்போகரன்சி நிறுவனத்தின் தலைவர் ரே யூசெப் இது தொடர்பான குற்றச்சாட்டை கடந்த திங்கட் கிழமை(26) தனது எக்ஸ் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். இஸ்ரேலிய படையினரின் கோரிக்கைக்கு அமைவாக இந்த நிறுவனம் எல்லா பாலஸ்தீன மக்களின் பணம் முழுவதையும் சட்டவிரோதமாக திருடியுள்ளதாகவும் அதனை மீள

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# எந்த சமூகவலைத்தளமும் பாதுகாப்பானது அல்ல - ரஸ்யா

குறுந்தகவல்களை அனுப்பும் சமூகவலைத்தள தொலைபேசி மென்பொருட்களை ரஸ்யாவின் முக்கிய அரச அதிகாரிகள் பயன்படுத்துவதில்லை, ஏனெனில் எந்த சமூகலைத்தளமும் பாதுகாப்பானது அல்ல. அவை கண்காணிக்கப்படுகின்றன. ரஸ்ய அதிகாரிகள் ரஸ்யாவினால் வடிவமைக்கப்படும் மென் பொருட்களையே பயன் படுத்து வதுண்டு என ரஸ்யாவின் அரச தரப்பு பேச்சாளர் டிமிற்றி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.



ரஸ்யாவினால் வடிவமைக்கப்பட்ட மென்பொருட்களைத் தவிர எந்தவொரு மென்பொருட்களையும் ரஸ்யாவின் அரசதலைவர் பணிமனை பணியாளர்கள் பயன்படுத்துவதில்லை.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம்

## அவசரமாக இலங்கை வந்தார் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர்



இலங்கையில் அரச தலைவருக்கான தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் 3 வாரங்கள் உள்ள நிலையில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இந்த வாரம் அவசரமாக இலங்கை வந்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அவர் இலங்கை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, பிரதமர் தினேஸ் குணவர்த்தனா, எதிர்க்கட்சித் தலைவரும் அரச தலைவர் வேட்பாளருமான சஜித் பிரேதமதாசா, மற்றும் அரச தலைவர் வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க மற்றும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் அரச தலைவர் வேட்பாளர் நாமல் ரஜபக்சா ஆகிரோர் உட்பட மலையகத்து கட்சிகள், கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான், மனோ கணேசன் மற்றும் தமிழ் கட்சிகளையும் சந்தித்திருந்தார்.

அஜித் தோவலுக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் வியாழக் கிழமை(29) நடைபெற்ற சந்திப்பின் போது தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம், தேர்தல் புறக்கணிப்பு கோஷம் உள்ளிட்ட பல் வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது குறித்து தான் எதனையும் கூறப்போவதில்லை எனவும், இருப்பினும் அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்து நின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்த தீர்மானமாக அமையும் என்று தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும், ரெலோவின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனுக்கும், புளொட் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனுக்கும் அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது.

அதன்படி சந்திப்பில் சிறீதரன், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனார். இந்தச் சந்திப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் நிலைவரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கடந்த 75 வருடகால அனுபவத்தில் தமிழ் மக்களால் ஒற்றையாட்சியின் கீழ் வாழ முடியாது என்பதைத் தாம் புரிந்துகொண்டிருப்பதாகவும், அதே போன்று அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாகத் தோல்வியடைந்திருப்பதன் காரணமாக அதனூடாக தமிழ் மக்களால் முன்நோக்கிச்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தியாகி திலீபன் மாதத்தில் ஈழத்தமிழர் இறைமைக்காக தேசமாக மக்கள் போராட இரு சனநாயகக் களங்கள்

முப்பத்தேழு ஆண்டுகளாக செப்டெம்பர் மாதம் என்றாலே ஈழத்தமிழர்கள் தியாகி திலீபனின் அறவழிப்போராட்ட உறுதியையும் தேசமாக ஒன்றுபட்டெழுந்து போராட வேண்டுமென்ற அழைப்பையும் நெஞ்சிருத்தி தியாகி திலீபனுக்கு வீரவணக்கம் செய்வது வழமை. ஆனால் இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் 9ம் நாளும் செப்டெம்பர் 21ம் நாளும் ஈழத்தமிழர்கள் தியாகி திலீபனின் அதே அறவழிப்போராட்ட உறுதியுடன் தேசமாக எழுந்து போராடுவதற்கான இரண்டு சனநாயகக் களங்கள். ஒன்று அனைத்துலக நிலையிலும் மற்றது தாயக நிலையிலும் தோன்றியுள்ளன. இவ்வாண்டு செப்டெம்பர் 9ம் நாள் தொடங்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57வது அமர்வில் 2015ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் வழி தொடங்கப்பெற்ற சிறிலங்காவின் பொறுப்புக்கூறல், நல்லாட்சி, மனித உரிமைகள் தொடர்பான நெறிப்படுத்தல்களுக்கான கால எல்லை நீடிப்பு மீளவும் நிறைவு பெறுவதால் இதனைக் கொண்டு வந்த நாடுகள் மீளவும் காலநீடிப்புச் செய்ய வேண்டும் அல்லது புதிய நெறிப்படுத்தலை வெளியிட வேண்டும். இதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரே சுட்டிக்காட்டியுள்ளார். இந்நேரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இந்த நெறிப்படுத்தல்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையின் 60/251 இல் விதந்துரைக்கப்பட்டிருக்கும் இயற்கை நீதிக்கோட்பாடுகள், நடுநிலைமை, மற்றும் சகலரும் சமத்துவம் என்பவற்றுக்கு எதிரானதென்ற வாதத்தைத் தொடங்கியுள்ள சிறிலங்கா இந்த நெறிப்படுத்தல்களைத் தடுத்து நிறுத்துவதற்குச் சட்டரீதியாகவும் தனக்கு ஆதரவான நாடுகளின் செல்வாக்குப் பிரயோகத்தாலும் தன்னாலான எல்லா முயற்சிகளையும் தொடங்கிச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் அனைத்துலகிலும் இத்துறையில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் தங்கள் பங்களிப்பைச் செய்யும் அமைப்புக்களும் செயற்பாட்டாளர்களும் வேறுபாடுகளை மறந்து ஒருங்கிணைந்து சிறிலங்காவுக்கு எதிர்வினையான பலமான பொதுக்களமொன்றை மிகவிரைவாகக் கட்டமைக்க வேண்டுமென்பது இலக்கின் இவ்வார முதல் எண்ணமாகவுள்ளது.

அடுத்தது இலங்கைக்கான முதல் பொதுத்தேர்தல் 1947 இல் ஆகஸ்ட் 15 முதல் செப்டெம்பர் 20 வரை நடைபெற்று செப்டெம்பர் 24 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் டி. எஸ். சேனநாயக்கா இலங்கையின் பிரதமராகி ஈழத் தமிழர்களின் இறைமையைச் சிங்களப்பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறை மூலம் ஒடுக்கத் தொடங்கிய வரலாற்றுக்குச் சமாந்தரமாக 77 ஆண்டுகளின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய தலைவராகவும் சிறிலங்கா அரசுத்தலைவர் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகவும் இரட்டை வேடத்தில் உள்ள இன்றைய சிறிலங்கா அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாண்டு செப்டெம்பர் 21ம் நாள் சிறிலங்காவின் 9வது அரசுத்தலைவர் தெரிவுக்கான தேர்தலை நடாத்துகின்றார்.

இதனை பொருளாதார மீளுறுதிப்பாட்டுக்கான தேர்தலெனச் சிறிலங்கா ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தாலும் 1924ம் ஆண்டு மன்னிங் அரசியல் சீர்திருத்தத்தால் பிரித்தானியக் காலனித்தவ அரசு தொடக்கி வைத்த பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் ஆட்சியை உறுதிப்படுத்தும் உத்தியின் உச்சமாக 100 ஆண்டுகளின் பின்னரும், யாழ்ப்பாண வன்னி அரசுகளின் நிலப்பரப்பான இலங்கையின் வடக்கு கிழக்கைச் பௌத்த சிங்கள நாடான சிறிலங்காவின் வடக்கு கிழக்கு எனவும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இலங்கையில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழரை சிங்கள நாடான சிறிலங்காவில் வாழும் சமுகமெனவும் தான் வெளிப்படுத்தி நிற்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரசியலை ஈழத்தமிழரும் ஏற்கிறார்கள். இதற்குச் சான்றாக இந்த அரசுத்தலைவர் முறைமைக்கு இத்தனை வாக்குகள் அளித்தார்கள் என உலகுக்கு உறுதிப்படுத்தும் தேர்தலாகவே முன்னெடுக்கின்றார். அத்துடன் முக்கிய நான்கு வேட்பாளர்களும் ஏகமனதாக சிங்கள நாடு சிங்களச் சட்டம் அதில் வாழும் சமுகமாக ஈழத்தமிழரைக் கருதுவோமெனத் தங்களின் தேர்தல் கொள்கை விளக்கத்தில் தெளிவாக்கியுள்ளனர்.

1931இல் பிரித்தானிய காலனித்துவ அரசு வழங்கிய 21 வயதுக்கு மேற்பட்டோர் அனைவருக்கும் வாக்குரிமையென்ற டொனமூர் அரசியல் சீர்திருத்தம் மூலமான இலங்கையர்க்கான பொறுப்பாட்சி முறைமை அரசாங்கம் ஈழத்தமிழர்களின் தேச இனம் என்ற வரலாற்று நிலையைத் திரிபுபடுத்தி இலங்கையின் சிறுபான்மையினர் என்ற புதிய அரசியலடையாளத்தைப் பெறவைத்தது. அதனை 93 ஆண்டுகளின் பின்னரும் நாம் தனியான தேச இனம் என்று அடையாளப்படுத்த வேண்டிய தேர்தலாக இத்தேர்தலை பொதுவேட்பாளர் மூலம் ஈழத்தமிழர் முன்னெடுக்க வேண்டிய நிலை. 1931 பொதுத்தேர்தலை யாழ்ப்பாணத் தொகுதியில் புறக்கணித்ததன் மூலம் இலங்கைத் தமிழர்கள் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் போராட்டத்தை 93 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கினர். ஆயினும் எதிர்பார்த்த எந்தப் பலனையும் தராதநிலையில் 1934 முதல் பருத்தித்துறைச் சட்டவாக்கசபை உறுப்பினராக தெரிவான ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் தேர்தலில் பங்கெடுத்துப் போராடும் அரசியல் போராட்ட வடிவை முன்னிலைப்படுத்தினார். 1938 முதல் 1944 வரை சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிக் கொடுங்கோன்மையை, இலங்கைத் தமிழர் இந்தியத் தமிழர் முஸ்லீம்களுக்கு 50 வீதமும் சிங்களவர்களுக்கு 50 வீதமும் என்ற உறுப்புரிமை மூலம் சட்டவாக்க சமத்துவத்தால் தவிர்க்க முயன்று வந்தவர் பொன்னம்பலம் அவர்கள். ஆனால் சிங்களத் தலைமையான டி. எஸ் சேனநாயக்காவுடன் இணைந்து அதனை முழுஅளவில் எதிர்த்த பிரித்தானிய ஆளுனர் அன்ரூ கோல்டிகொட் 1944 அக்டோபர் 07இல் விலகிச் செல்லும் வரை 50க்கு 50 ஐ ஏற்க மறுத்தார். இத்தகைய நேரங்களில் புதிய முறைமையொன்று இயல்பாகத் தேவைப்படும். இதுவே 1944 அக்டோபர் 29 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைத் தொடங்கி 1947ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்திற்கான முதல் தேர்தலில் பங்குபற்றியதன் மூலம் தமிழர் தமக்கான கட்சி மூலம் பாராளுமன்றத்தின் வழி போராடும் முறைமையை சரியாக 80 ஆண்டுகளுக்கு முன்னர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் தொடக்கி வைத்தது வரலாறு. இன்று மீளவும் ஈழத்தமிழர்கள் பொதுவேட்பாளர் முறைமையைத் தொடக்கப்புள்ளியாகக் கொண்டு தேசியப் பொதுக்கட்டமைப்பு மூலமான பாராளமன்றப் போராட்ட முறைமையை மீளவும் தொடங்குவது இன்றைய வரலாற்றின் தேவையாகவுள்ளது.

22.05. 1972 முதல் இலங்கைத் தமிழர்களை ஆளும் அரசியலமைப்புத் தகுதியை இழந்து விட்ட சிறிலங்காவின் தேர்தல்கள் எல்லாவற்றையும் புறக்கணித்து ஈழத்தமிழர்கள் 1978 முதல் 2009 வரை 31 ஆண்டுகள் தங்களுக்கான நடைமுறையரசை நிறுவி வாழ்ந்தனர். பின்னர் 2009 சிறிலங்காவின் முள்ளிவாய்க்காலில் 176000 ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த ஈழத்தமிழின அழிப்பின் மூலம் தோற்றுவித்த சமகால சிறிலங்கா அரசையும் பெரும்பான்மையான ஈழத்தமிழர்கள் தமது அரசாகவோ தமக்கான ஆட்சி முறைமையாகவோ மனம் விரும்பி ஏற்கவில்லை. இதனைத் தேர்தலைப் புறக்கணித்தல் மூலம் கடந்த 15 ஆண்டுகளாக வெளிப்படுத்தியும் வருகின்றனர். இருந்த போதிலும் ஈழத்தமிழர்கள் சனநாயகவழிகளில் தங்கள் உரிமைகளைப் பெற மறுக்கிறார்கள் என்ற சிறிலங்காவின் கூற்றையே உலக நாடுகளும் உலக அமைப்புக்களும் தமது கருத்தாகவும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதனால் இவ்வாண்டில் வாக்களியாது விடும் புறக்கணிப்புப் போராட்டத்தாலும், பொதுவேட்பாளரான அரியநேத்திரனை தமிழ்த்தேசியப் பொதுவேட்பாளராக நிறுத்தி "நமக்கு நாமே வாக்களித்தல்" என அவருக்கு வாக்களித்துச் சிறிலங்காவின் அரசியல் முறைமையைப் புறக்கணிக்கும் போராட்டத்தாலும் ஒரே இலக்கை இரு வழிகளில் ஈழத்தமிழர் அணுகுகின்றனர். ஈழத்தமிழரின் இன்றைய விருப்பும் 1977 ம் ஆண்டின் மக்களாணையான எங்களின் இறைமையை மீளுறுதி செய்தல் என்பதை பொதுவேட்பாளர் உறுதியாக மீள்பிரகடனம் செய்தாக வேண்டும். இது பிரிவினையல்ல. பயங்கரவாதமல்ல. தாயக தேசிய தன்னாட்சி உரிமையுடன் உலகின் மக்களினமொன்று வாழ எடுக்கும் அரசியல் முயற்சியென்பதை அனைவருக்கும் மீள்தெளிவாக்கவேண்டும் என்பது இலக்கின் வேண்டுகோளாகவுள்ளது.

அத்துடன் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவல் இலங்கை வந்து வீதி இணைப்பு ரயில் இணைப்பு மின்னிணைப்பு, எரிபொருள் இணைப்பு என்னும் நான்கு தளங்களில் இலங்கை இந்தியாவை இணைக்கும் உத்தேச திட்ட அறிக்கையை இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் மிலிந்த மொரகொடவிடம் கையளித்ததும் அல்லாமல் சிறிலங்காப் பிரதமரையும் மலையகத் தமிழர்களின் தலைமைகளையும் சந்தித்துள்ளார். கூடவே கிழக்கில் இந்தியத்துணைத்தூதரகம் வேண்டுமென்ற கோரிக்கையும் மட்டக்களப்பிலிருந்து எழுப்பப்பட்டுள்ளது. இந்தியா மட்டுமல்ல சீனா, அமெரிக்க உட்பட உலகநாடுகள் பலவும் ஈழத்தமிழரின் தாயகத்தில் தங்கள் நலன்களை உறுதி செய்யும் முயற்சிகளில் இறங்கியுள்ளமை தெளிவான விடயம். இந்நேரத்தில் ஈழத்தமிழர்கள் தேசியப்பொதுக்கட்டமைப்பு ஒன்றில் தம்மை வெளிப்படுத்த வேண்டியது மிகத்தேவையான விடயமாகிறது. எனவே உள்வேறுபாடுகளை மதித்து அவை ஈழத்தமிழர்களின் தேசமாக எழும் தன்மைக்குப் புதிய ஆற்றலை அளிக்கக் கூடிய முறையில் கூட்டாண்மைகள் பங்காண்மைகள் கொண்ட தேசமாக எமது தேசம் உள்ளதாக மாற இந்தப் பொதுவேட்பாளருக்கு அளிக்கும் வாக்குகள் பலமளிக்குமென்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# தென்னிலங்கை விஞ்ஞாபனங்கள்



# தமிழர்களுக்கு சொல்லும் செய்தி!

அகிலன்

தென்னிலங்கையின் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருப்பதை நியாயப்படுத்தும் வகையில் தான் இந்த விஞ்ஞாபனங்கள் அமைந்திருக்கின்றன. இந்த விஞ்ஞாபனங்களுக்காக காத்திருந்த தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணிக்கும் இது நெருக்கடியை கொடுப்பதாகவே இருக்கின்றது.

பிரதானமான ஜனாதிபதி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்#கிரமசிங்க, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தித் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் இந்த வாரத்தில் வெளிவந்துள்ளன. மற்றொரு ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த வாரம் வெளிவரவுள்ளது.

விஞ்ஞாபனத்தை வெளியிட்ட எந்தவொரு வேட்பாளரும் வடக்கு, கிழக்கு இணைப்பு, சமஷ்டித் தீர்வு, மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்த உறுதிமொழியையும் வழங்கவில்லை. நாமல் ராஜபக்ஷ தாம் அதிகாரப் பகிர்வுக்கும், வடக்கு கிழக்கு இணைப்புக்கும் எதிரானவர் என்பதை ஏற்கனவே உறுதிப்படுத்தியிருக்கின்றார். ஆக, தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளையிட்டு அவர்கள் யாரும் கவலைப்படவில்லை.



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவின் "வளமான நாடு அழகான வாழ்க்கை" என்ற பெயரிலான தேர்தல் விஞ்ஞாபனம் ஸ்ரீஜயவர்தனபுர மொனார்க் இம்பிரியல் ஹோட்டலில் திங்கட்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கான தேசிய மக்கள் சக்தியின் உறுதி மொழிகளாக அரசியலமைப்பு மறுசீரமைப்பு பணியை துரிதப்படுத்தி ஒரே நாட்டிற்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்பு கொள்ளக்கூடியவாறு மொழி உரிமை உறுதிப்படுத்தப்படுவது போன்ற விடயங்களே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.



ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் மற்றும் நிர்வாக ரீதியில் அதிகார பகிர்வுடனான புதிய அரசியலமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். வடகிழக்கில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற படுகொலைகள் காணாமல் போகச் செய்தல் ஆட்கடத்தல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு நீதியை நிலைநாட்டவும் மற்றும் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களிலும் மக்களது சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான சிவில் நிர்வாகத்தினை முறைமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பவை மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தன.

அநுரகுமாராவின் தேர்தல் விஞ்ஞாபனம் இவ்வாறுதான் வரும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். சிங்களக் கடும் போக்காளர்களின் வாக்குகள்தான் அவர்களுக்கு முக்கியமானவை. தமிழர்களுக்கு உறுதிமொழிகளைக் கொடுத்து அதனை இழக்க அவர்கள் தயாரில்லை.

பிரதான இரு வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களுக்கு காத்திரமான விடயங்கள் உறுதிமொழிகளாக வழங்கப்படுமென எதிர்பார்த்திருந்தார்கள். தமது ஆதரவை எந்த வேட்பாளருக்கு வெளிப்படுத்துவது என்பது தொடர்பில் முடிவெடுக்க தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியினர் இவ்விருவரின் தேர்தல் விஞ்ஞாபனங்களை எதிர்பார்த்திருந்த நிலையிலேயே இவ்விருவரினாலும் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களும் அவர்களுக்கு ஏமாற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளன.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வியாழக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் வைத்து வெளியிடப்பட்ட "ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பு, சமஷ்டித் தீர்வு, மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்த உறுதிமொழிகளும் வழங்கப்படவில்லை.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக 2024 இல் நாம் முன்வைத்த முன்மொழிவின் பிரகாரம் அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படும், மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவது தொடர்பான தீர்மானம் எடுக்கும் அதிகாரம் புதிய நாடாளுமன்றத்துக்கு வழங்கப்படும். உண்மை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தரகுநிலை அரசியல் தவிர்க்கப்பட வேண்டும்

## தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன்



**‘ஒற்றுமையாக ஒரே கொள்கை ஒரே இலக்குடன் பயணிக்க வேண்டும். தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை ஒவ்வொன்றுக்குமான தீர்வில் கருத்தொருமைப்பாட்டினை எட்ட வேண்டும். புலத்திலிலுள்ள உறவுகளும் புலம் பெயர்ந்த உறவுகளும் மோதிக் கொள்ளாமல், புரிதலுடன் ஒரே இலக்குடன் செயலாற்ற முன்வரவேண்டும்’ என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இதுவரை இருந்த ஜனதிபதிகளும் தமிழர்களை அதிகமான அளவில் ஏமாற்றியுள்ளனர். இந்த ஏமாற்றத்தினதும் மாற்று விளைவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஆகும் எனவும் அவர் தெரிவித்தார்.**

**இலக்கு வார இதழுக்கு வழங்கிய சிறப்பு செவ்வியின் முழு வடிவம்:-**

**கேள்வி:**

**தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவு தளம் கிழக்கில் எவ்வாறு காணப்படுகின்றது?**

நான் நினைக்கிறேன் பொதுக்கட்டமைப்பு சார் உறுப்பினர்கள் இப்போதுதான் கிழக்கில் விழிப்புணர்வுக் கூட்டத்தினையும் பிரதேச செயலக மட்டத்திலான பரப்புரையினையும் ஆரம்பித்து உள்ளனர்.

மேலும் கடந்த கால ஜனாதிபதிகளின் ஏமாற்றுச் செயல்களை மக்களுக்கு அறியும் வாய்ப்பினை அளித்து வருகின்றனர்.

திருகோணாமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தமது உள்ளூராட்சி அமைப்பினர் சகிதம் பொது வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பாக பகிரங்கமாக அறிவித்துள்ளார். ஏனைய மாவட்டங்களிலும் படிப்படியாக விழிப்புணர்வு ஏற்படக்கூடிய களநிலை உருவாகி வருகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச் செயலாளர் அருண் அவர்களும் கிழக்கில் இருந்து, பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக அறிவித்துள்ளார்.பொது வேட்பாளர்தற்போது வடக்கில் ஆதரவாளர்சகிதம் பரப்புரை நடாத்துகின்றார். கிழக்கில் வரும் போது ஆதரவு நிலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

**கேள்வி:**

**தமிழரசுக்கட்சியை சேர்ந்த அரியநேத்திரனை பொதுவேட்பாளராக அறிவித்தமை தொடர்பில் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடான நிலைமை இன்று எவ்வாறு காணப்படுகின்றது?**

அவரிடம் விளக்கம் கோரிக் கட்சி மூலமாகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் 83 சிவில் கட்டமைப்புகள் பொது வேட்பாளர் விடயத்தில் தொடர்பு பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஆதரிக்கின்றன. எனவே பொதுவேட்பாளரை கண்மூடிக் கொண்டு எதிர்க்க முடியாத சூழல் உருவாகி வருகின்றது. இவ்விடயம் தொடர்பாக தமிழரசுக் கட்சியினர் ஆழமாகச் சிந்திக்க வாய்ப்புள்ளது. கடந்த காலத்தில் சிங்கள ஜனாதிபதிகள் 46 ஆண்டுளாக ஏமாற்றியுள்ளதை தமிழரசுக் கட்சியினர் மறக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அரியநேத்திரன் என்பதல்ல விடயம். பல சிவில் கட்டமைப்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ் பொது வேட்பாளர் என்பதை தமிழரசுக்கட்சி உணர்வதாகத் தெரிகிறது.

**கேள்வி:**

**அனுரவின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்தான பல்வேறு கருத்துகள் பகிரப்பட்டுவருகின்றது. குறிப்பாக தமிழர்களுக்கு சாதகமாக பல விடயங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது, இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பொதுவாக நோக்கினால் ஊழல் மோசடி கையூட்டு வீண்விரயம் கொள்ளை என்பவற்றைத் தடுக்கும் விஞ்ஞாபனமாக அது உள்ளது. பாதுகாக்கப்பட்டு வரும் குற்றவாளிகளை சட்டத்திற்கு முன் நிறுத்தும் விடயமும் கூறப்பட்டுள்ளது. நல்லாட்சிக்கால அரசியல் தீர்வு தொடர்பான யாப்பு விடயத்தினைத் தொடரவுள்ளதாகவும், இன விகிதாசாரத்தை மாற்றும் திட்டமிட்ட குடியேற்றக்களைத் தடுக்க உள்ளதாகவும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது. இருந்தும் தமிழரின் இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு பற்றிக் குறிப்பிடவில்லை.அதனைத் தெளிவுபடுத்தாமை குறைபாடாக உள்ளது.

**கேள்வி:**

**வடக்கு கிழக்கு இருக்கும் இன்றைய சூழ் நிலையில் தமிழ் பொதுவேட்பாளர் அவசியம் குறித்து என்ன கருதுகின்றீர்கள்?**

1982 இல் இருந்து எட்டு ஜனாதிபதித் தேர்தல்கள் மூலமாக ஜனாதிபதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இரு ஜனாதிபதிகள் இடைக் கால ஜனாதிபதிகளாகப் பதவி ஏற்றுள்ளனர். இதில் அனைத்து ஜனதிபதிகளும் தமிழர்களை ஏமாற்றியுள்ளனர்.

இந்த ஏமாற்றத்தினதும் மாற்று விளைவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஆகும். இவ்வாறு ஏமாற்றிய சிங்கள வேட்பாளர்கள் மீது தமிழர்கள் வெறுப்படைந்துள்ளனர். இந்நிலையில், தமிழர்களின் ஒற்றுமை, தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமை,தமிழர்களின் ஒரே குரலிலான தீர்வு என்பவற்றை உள்நாட்டுக்கும், சர்வதேசத்திற்கும் கூற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.



மேலும் காணாமல் ஆக்கப்பட்டேருக்கு 15 ஆண்டுகளாக நீதி கிடையாமை, தமிழ் அரசியல் கைதிகளின் முழுமையான விடுதலை, தொல்லியல் ஆக்கிரமிப்பு இவ்வாறான விடயங்களில் கடந்த காலத்தில் ஜனாதிபதிகள் ஏமாற்றுவதையே தமது தந்திரமாகக்கருதி வந்துள்ளனர். எனவே ஜனநாயகப் போராட்டத்தின் ஒரு வடிவமாக தமிழ்ப் பொது வேட்பாளரை83 சிவில் சமூகங்கள் சார்ந்த கட்டமைப்பு கருதுகின்றது. அதனை ஏற்க வேண்டியும் உள்ளது.

**கேள்வி:**

**வடக்கு கிழக்கில் இன்று தமிழ் பொதுவேட்பாளர்களை எதிர்ப்பவர்களின் நோக்கம் எதுவாகவுள்ளது?**

இதனை உண்மையில் அவர்களிடமே கேட்க வேண்டும். தமிழ் வேட்டாளர் தவிர்ந்த வெற்றி பெறக்கூடிய வேட்பாளர்களுடன் ஏதும் ஒப்பந்தங்கள் தனிப்பட்ட முறையில் செய்திருக்கலாம் என்று மக்கள் ஐயமுறுகின்றனர். அதாவது உரிமை சார் விடயங்களை விட, வேறு விடயங்களில் அக்கறை காட்டுகின்றார்களோ தெரியவில்லை. மேலும் ஐந்தாண்டு காலமைய குறுகிய சிந்தனையாகவும் அமையலாம்.

**கேள்வி:**

**எதிர்காலத்தில் தமிழ் மக்களும் புலம்பெயர் மக்களும் எவ்வாறான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டும் என்று கருதுகின்றீர்கள்?**

ஒற்றுமையாக ஒரே கொள்கை ஒரே இலக்குடன் பயணிக்க வேண்டும். தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை ஒவ்வொன்றுக்குமான தீர்வில் கருத்தொருமைப்பாட்டினை எட்ட வேண்டும். புலத்திலிலுள்ள உறவுகளும் புலம் பெயர்ந்த உறவுகளும் மோதிக் கொள்ளாமல், புரிதலுடன் ஒரே இலக்குடன் செயலாற்ற வேண்டும்.

சமஷ்டித்தீர்வு, சர்வதேச விசாரணை, வடக்கு கிழக்கில் தமிழர் தீர்வு தொடர்பாக கருத்துக் கணிப்பு போன்றவற்றில் ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டும். தமிழ்த் தேசியத்தை சிதைக்கின்ற, ஒற்றுமையைக் குலைக்கின்ற செயல்களில் ஈடுபடக்கூடாது. தரகுநிலை அரசியல் தவிர்க்கப்பட வேண்டும்.

• • •

# நல்லாட்சி அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்திட்டத்தின் இடை நிறுத்தம் ஏன்?

ஹஸ்பர் ஏ ஹலீம்

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. அப்போதைய வீடமைப்பு அமைச்சராக செயற்பட்ட தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர் சஜீத் பிரேமதாசவினால் வடக்கு கிழக்கு உள்ளிட்ட மாகாணங்களில் வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இந்த திட்டங்கள் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளன. நல்லாட்சி அரசாங்கத்தில் ரணில் விக்ரமசிங்க பிரதமராக செயற்பட்டவர் ஜனாதிபதியாக மைத்திரி பால சிறிசேன செயற்பட்டார். அதன் பின் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக கோட்டாபாய ராஜபக்ச அரசாங்கத்தை பொறுப்பேற்றதன் பின் குறித்த வீடமைப்பு திட்டங்கள் இடை நடுவே கைவிடப்பட்டன.



கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் குறித்த வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு ஒவ்வொரு கிராமப் பகுதியிலும் வீடுகள் அமைக்கப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பகுதியிலும் வீடமைப்பு திட்டங்களை தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் நடைமுறைப் படுத்தினர் முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட வீடுகளை வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜீத் பிரேமதாச அவர்கள் திறந்து வைத்து மக்கள் பாவனைக்காக கையளித்தார்.

இருந்த போதிலும் தமிழர் பகுதிகளில் பல வீடுகள் அத்திவாரம் இடப்பட்டும், முழுமையாகக் கட்டப்படாமல் இடை நடுவிலும் கைவிடப்பட்டு காடு மண்டி பாழடைந்தும் காணப்படுகிறன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிண்ணியா பிரதேச பயனாளி ஒருவரின் கருத்துப்படி, "தங்க நகைகளை அடகு வைத்து கட்டினோம். வீடுகள்முழுமையாகபூரணப்படுத்தப்படவில்லை. கட்டம் கட்டமாக பணம் தருவதாக கூறினார்கள். ஒன்றுமே நடக்கவில்லை' என்றார்.

இவ்வாறாக நல்லாட்சி அரசாங்கத்தில் கட்டப்பட்ட பல வீடுகளை அதன் திட்டத்தை நடைமுறைப்படுத்திய ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜீத் பிரேமதாச அவர்கள் ஜனாதிபதியானால் இதனை நிறைவேற்றுவாரா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்ரமசிங்க அப்போது பிரதமராக நல்லாட்சியில் செயற்பட்டார். மீண்டும் ஜனாதிபதியானால் குறித்த திட்டம் மீண்டும் கைவிடப்படுமா? நிறைவேற்றப்படுமா? எனவும் மக்களின் எதிர்பார்ப்புக்கள் காணப்படுகிறது.

"ரணில் மைத்திரி அரசாங்கத்தில் சஜீத் பிரேமதாசவால் வீடு கட்டிக் கொடுப்பதாக தெரிவித்து முற்பணத்தொகைகளை செலவளித்து அத்திவாரமிட்டோம் வீடு கிடைக்கவில்லை. பணம் மாத்திரமே செலவாகியது " என மற்றொரு வீட்டுப் பயனாளி தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

மக்கள் தங்களுக்கான இருப்பிட வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக வீட்டுத் திட்டத்தின் பங்காளியாக வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு அரசியல்வாதிகள் மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட்டவர்கள் மூலமாக குறித்த வீடுகளை பெற எத்தனித்தார்கள். ஆனால் அது நடை முறையில் சாத்தியமாகவில்லை.

மக்கள் அவ்வப்போது தேர்தல் காலங்களில் வேட்பாளர்களின் வாக்குறுதிகளுக்காய் ஏமாந்து வாக்களிக்கின்ற போதிலும் இறுதியில் ஏமாற்றமடைந்து பொருளாதார கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

இது தொடர்பில் பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவர், 'எனக்கு மூன்று பெண் பிள்ளைகள் ஒரு பிள்ளைக்கு வீடு இல்லை அப்போது வீடு தேவை என கோரப்பட்டு வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு இடை நடுவில் கைவிட்டார்கள் கடன் பட்டு கட்டினேன் வீடு கிடைக்கவில்லை" என கவலையை வெளியிட்டார்.



திருகோணமலை மாவட்டத்தில் பல வீடுகள் இத் திட்டத்தின் போது நடைமுறைப்படுத்தப்பட்டன கிண்ணியா பிரதேச செயலக பிரிவு, தம்பலகாமம், குச்சவெளி, மூதூர், கந்தளாய், வெருகல், திருகோணமலை பட்டினமும் சூழலும் உள்ளிட்ட பல பிரதேச செயலகப் பிரிவிலும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் முடிவுறுத்தாமல் கைவிடப்பட்டன.

தங்களுக்கு தேவையான இருப்பிட வசதிகளுக்காக வீடொன்றை குடும்பமாக நிம்மதியாக வாழ்வதற்காக எதிர்பார்த்தாலும் மக்கள் ஏமாற்றமடைந்தார்கள். ஜனாதிபதி வேட்பாளர்கள் அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல வாக்குறுதிகளை மக்களுக்காக கூறப்பட்ட போதிலும் வெற்றியின் பின் நடை முறைப்படுத்துவதில்லை.

வடக்கு கிழக்கு சிறுபான்மை சமூகம் அவர்களது பல உரிமைகளுக்காக காத்திருக்கின்ற போதும் ஏமாற்றப்பட்டு உரிமைகள் மறுக்கப் படுகிறது அதில் ஒன்று தான் நல்லாட்சி அரசின் வீட்டுத் திட்டம். குறித்த வீட்டுத் திட்டங்கள் பாழடைந்து கவனிப்பாரற்று காணப்படுகிறது. அதிக பணத் தொகைகளை மக்கள் கடன்பட்டு செலவளித்து வேலைத் திட்டங்களை ஆரப்பித்தும் கனவு நிறைவேறவில்லை. கடன்களை அடைக்க முடியாமலும் வங்கிகளில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியாமலும் இத் திட்டம் ஊடாக மக்கள் தடுமாறுகின்றனர்.

''வீடுகளை கட்டித் தருவதாகச் சொல்லி, ஏமாற்றி விட்டார்கள். வீடு இன்றி இருந்ததையும் இழந்துள்ளோம். சஜீத் பிரேமதாச இதனை செய்து தருவார் என நம்புகிறோம் " திருகோணமலையை சேர்ந்த வீடமைப்பின் பயனாளி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒவ்வொரு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாலும் தேசிய அரசாங்கம் என்ற போர்வையில் வீடுகளை அமைப்பதற் கான திட்டங்கள் மாவட்ட ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டன. கட்சி ரீதியாக கட்சி சார்பில் இதனை வழங்கினர். ஆனால் பல வீட்டு தொகுதிகள் ஆட்சி மாற்றம் காரணமாக கைவிடப்பட்டன. 2015 தொடக்கம் 2019ம் ஆண்டு நல்லாட்சியாக காணப்பட்ட போதிலும் பல சிறுபான்மை இன கட்சிகள் இதனை பெற்றுக்கொண்டு தங்களது மக்களுக்காக இதனை வழங்கினர். இலங்கை தமிழ் அரசு கட்சி, மக்கள் காங்கிரஸ் , முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சிறுபான்மை சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி தலைவர்கள் தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவளித்து இதனை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# நவாலியின் துயரம் நிறைந்த படுகொலைகள்

பாகம் 2

வல்வை.ந.அனந்தராஜ்

தேவாலயத்தின் வளாகத்தில், கொத்து குண்டுகள் வீசப்பட்டதை நேரில் பார்த்தவர்கள் பலர் அந்தக் கொடூரங்களைப் பின்வருமாறு விபரித்தனர்.

விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல்களை மேற்கொண்ட பொழுது காலையில் சந்திரசேகரன் செல்வநாயகம் மற்றும் அவரது ஐந்து வயது சகோதரர் சசிராஜ் ஆகியோர் தேவாலயத்தை ஒட்டியிருந்த தங்கள் வீட்டில் இருந்தனர். பல ஆண்டுகளுக்குப் பின்னர், சசிராஜ் அந்தக் கொடூரமான சமபவங்களை பின்வருமாறு நினைவு கூர்ந்தார்.

“திடீரென்று சேர்ச் பக்கத்தில் மிகப்பெரிய குண்டுவெடிப்பு ஏற்பட்டது.அது எங்களுடைய வீட்டிலும் வந்து வெடித்ததால்,அந்தநேரம் நான் மூச்சடைத்துவிட்டேன். அதன்பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். நான் மருத்துவமனை யில் எழுந்திருக்கும் வரை எனக்கு நினைவிருக்கிறது”. இந்தத்தாக்குதலில்அவர்தனது கண் பார்வையை முற்றாகவே இழந்துவிட்டார். குண்டு வீச்சு நடைபெற்றபொழுது, வீட்டில் இருந்த, அவரது தாயார் கொல்லப்பட்ட விடயமும் மருத்துவ மனையில் இருந்து வெளியே வந்தபொழுதுதான் தெரியவந்தது.”



இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக ஐ.சி.ஆர்.சி சேகரித்த தரவுகளின் அடிப்படையில் பெறப்பட்ட மேலும் சில சாட்சியங்கள் கீழே தரப்படுகின்றன:

- **பிரகாசம் இராஜேந்திரன்,வயது 73:**

“பிரகாசம் ராஜேந்திரன் தேவாலய வளாகத்தை ஒட்டியுள்ள அவரது வீட்டின் நுழைவாயிலில்தான் இருந்தார். விமானங்கள் இரைச்சலுடன் பறந்து வருவதையும் அவர் பார்த்திருந்தார். அவரது மனைவி நாகேஸ்வரி அவருக்கு அருகில் தங்கியிருந்து, ‘துண்டுப்பிரசுரங்கள் போல காற்றில் வீசும் பறக்கும் குண்டுகள் வானத்தில் இருந்து ஆடி ஆடி விழுந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும், அவர் கூச்சலிடத் தொடங்கினார், மற்றவர்களைக் கீழே விழுந்து படுத்துக் கொள்ளுமாறும் எச்சரித்தார். மனைவி படுக்கும்போது, முதல் வெடிப்பைக் கேட்டாள், தொடர்ந்து சிலவற்றைக் கேட்டாள்.

- **ஜெகநாதன் ஜெயக்குமார் - 17 வயது**

ஜெகநாதன் ஜெயக்குமார் தேவாலய வளாகத்திலிருந்து சுமார் 100 யார் தொலைவில் உள்ள ஒரு சந்தியில் இருந்தார். விமானத்தில் இருந்து வெள்ளைப் பொருட்களின் கொத்துகள் தன்னை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை அவர் கண்டார் அந்த ஒரு கணத்திற்குள் விமானம் அவரைக் கடந்து சென்றபோது, தேவாலயப் பகுதியைச் சுற்றி தொடர்ச்சியான வெடிப்புகள் கேட்டதாகவும் கூறினார்.



- **ஜோர்ஜ் தேவா- 45 வயது**

ஜோர்ஜ் தேவா என்ற 45 வயதுடைய பெண் தேவாலய வளாகத்திற்கு வெளியே சாலையில் நின்று கொண்டிருந்தார். ‘பெரிய தர்பூசணி’ போன்ற சில பொருட்களை விமானத்தில் இருந்து வீசப்படுவதைப் பார்த்ததாகவும் கூறினார்.

- **அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளார்:**

அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளார், இந்த சம்பவத்தின் போது மானிப்பாயில் உள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் இருந்த பொழுது, ஒரு விமானத்தில் இருந்து சுமார் 6 குண்டுகள் வரை ஒன்றன் பின் ஒன்றாக விழுவதையும் கண்டதாகத் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் தனது மனைவியை இழந்த மானிப்பாய் கிழக்கைச்சேர்ந்த கமலநாதன் என்பவர் தெரிவிக்கையில்...

“மாலை 4:30 மணிபோல் பெரிய குண்டுச் சத்தமும் புகை மண்டலமும் வயலுக்குள் நின்று பார்க்கும்போது நவாலிப் பக்கமாகத் தெரிந் தது. உடனே மகனையும் கூட்டிக்கொண்டு ஓடோடி வந்து பார்த்தால் எனது வீட்டிற்குள் போக முடியவில்லை. கட்டட இடிபாடுகளும் முறிந்த மரங்களுமாக வீதியெங்கும் இருந்தது. அதையும் தாண்டி வளவிற்குள் வந்து பார்த்தபோது எனது மனைவிக்கு நெஞ்சிற் காயம்பட்டு இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது. மகளிற்கு தலையிலும் கையிலும் காயம். இருவரும் சாய்ந்தபடி இருந்தார்கள். அவர்களைத்தாண்டி சற்றுத் தள்ளிப் பார்த்தபோது எனது மைத்துனர் குணரட்ணம் குடும்பத்தில் அவரும் அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் முற்றத்திலேயே இறந்து கிடந்தார்கள். மனைவிக்கும் மகளுக்கும் துணியாற் காயத்திற்குக் கட்டுப் போட்டுவிட்டு அருகிலிருந்த சகோதரி என்ன ஆகியிருப்பாரெனப் பயந்துபோய்ப் பார்த்தபோது எனது மைத்துனர் கணேசலிங்கம் அழுதுகொண்டு மனைவி இறந்துவிட்டார். உங்களுடைய குடும்பத்தைப் போய்ப் பாருங்கோ என்று சொல்லியபடி சகோதரியைத் தூக்கிக்கொண்டு வந்தார். அந்தநேரம் வந்த அம்புலன்ஸ் வண்டியில் மனைவியையும் மகளையும் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குக் சென்றுகொண்டிருந்தோம். போகும்போது மனைவியுடன் கதைத்துக்கொண்டிருந்தேன்.அங்கு கொண்டு போய்ச் சேர்த்த போது அன்றையதினம் ஞாயிற்றுக்கிழமை பிரதான வைத்தியர்கள் இருக்கவில்லை. இருந்தவர்கள் எல்லோரும்வந்து தொட்டுப்பார்த்துவிட்டுச் சென்றார்கள்.அப்போது அவருடைய கை திடீரெனக் கீழே விழுந்தது. அந்தவேளை “அப்பா பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுங்கோ” என்றதோடு அவரின் உயிரும் பிரிந்து விட்டது.” என்று கண்ணீரின் மத்தியில் தெரிவித்தார்.



- **திருமதி.அன்ரனி குறூஸ் கமலா**

நவாலி சென்ற். பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது குண்டுகள் வீசப்பட்டபொழுது,அந்த இடத்தில் நின்ற சமுகச்செயற்பாட்டாளரான,திருமதி.அன்ரனி குறூஸ் கமலா தெரிவிக்கையில்,

“அன்று காலையில் இருந்தே,விமானங்களின் இரைச்சலும்,குண்டுச்சத்தங்களும் கேட்டுக் கொண்டே இருந்தன. இதன் காரணமாக தூர இடங்களில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான மக்கள் அலறித் துடித்துக்கொண்டு, இந்தக் கோயிலை நோக்கியே ஓடிவந்தனர்.அங்கிருந்து ஓடி வந்தவர்கள் தேவாலயத்திலும், அருகில் உள்ள பள்ளிக்கூடத்திலும் தஞ்சமடைந்திருந்தனர். நாங்கள் ‘வின்சன்ற் டிபோல்’ என்ற ஒரு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# வினைத்திறன் மேம்பாடு

துரைசாமி நடராஜா

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் இளைஞர்களின் வகிபாகம் அதிகமாகும். இந்நிலையில் இளைஞர்களை நாட்டிற்கு பொருத்தப்பாடுடையவர்களாக மேலெழும்பச் செய்து அவர்களின் நலன்களை பேணிப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. இந்த வகையில் மலையக இளைஞர்களின் பல்துறை மேம்பாடு தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இந்நிலையில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா இளைஞர்களின் முக்கியத்துவம் தொடர்பில் வலியுறுத்தியுள்ளதோடு, இளைஞர்களை மையமாகக்கொண்ட விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவை ஸ்தாபித்து, அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய பொறிமுறையொன்று தனது ஆட்சியில் ஜனாதிபதியின் மேற்பார்வையின் கீழ் தாபிக்கப்படும் என்று கருத்து வெளியிட்டுள்ளர்.



எல்லா சமூகங்களிலும் இளைஞர்கள் பலம் மிக்கதொரு சமூக, பொருளாதார குடித்தொகை பிரிவினராகக் கருதப்படுகின்றனர். இவர்களின் விசேட பண்புகள், தேவைகள், சமூக உளவியல் ரீதியான நடத்தை முறைகள் என்பன காரணமாகவே தனிப்பட்ட ஒரு சமூகப் பிரிவினராக அவர்கள் கருதப்படுவதாக புத்திஜீவிகள் விளக்கமளிக்கின்றனர். இளமைப் பருவமானது ஒருவனது வாழ்வில் பெரும் மாற்றங்களைக் கொண்ட காலப்பகுதியாகும். 15 வயதுவரை பெற்றோரில் தங்கியிருக்கும் பிள்ளைகள் அடுத்த சுமார் 7 தொடக்கம் 8 ஆண்டுகளில் தொடர்ந்தும் பெற்றோருடனேயே தங்கியிருந்தாலும் கூட, ஓரளவு சுதந்திரமாக வாழத் தொடங்குகின்றனர். இக்காலப்பகுதியில் அவர்கள் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட முயல்வதோடு தம்மிடமிருக்கும் பல்வேறு திறமைகளையும் வெளிக்கொணரவும் முயல்வார்கள். தீர்மானங்களை மேற்கொள்வதில் தமக்கு பங்கு இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பும் நிலையில் தனிநபர் அபிவிருத்தி, சமூகப் பங்கெடுப்பு என்பன தொடர்பாகவும் இக்காலப்பகுதி அவர்களுக்கு முக்கியத்துவம் மிக்க ஒன்றாகும் என்பதும் புத்திஜீவிகளின் நிலைப்பாடாக உள்ளது.

இளைஞர்கள் சமூக மாற்றத்திற்கான அச்சாணியாக செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் இது நடந்தேறியுள்ளது. இந்நிலையில் இளைஞர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அவர்களுக்கு உரிய இடமளித்து அரவணைத்து செல்ல வேண்டிய ஒரு தேவை காணப்படுகின்றது. இதேவேளை இளைஞர்களை உள்வாங்கிக் கொள்ளாது அவர்களை புறக்கணிக்கும் நிலைமையானது பல்வேறு பாதக விளைவுகளுக்கும் அடித்தளமாக அமையும் என்பதையும் மறுப்பதற்கில்லை. இதனால் ஏற்படும் தழும்புகள் நீண்ட காலம் நின்று நிலைக்கும் என்பதும் தெரிந்த விடயமாகும். இத்தகைய அனுபவம் இலங்கை உள்ளிட்ட சர்வதேச நாடுகள் பலவற்றுக்கும் உள்ளது. இளைஞர் விரக்தி நிலையானது மனச்சோர்வு, முரண்பாடுகள், தற்கொலை போன்ற பல விடயங்களுக்கும் அடித்தளமாகின்றன. இதேவேளை வறுமை, வேலையின்மை, கல்வியறிவின்மை, இனரீதியானதும் அரசியல் ரீதியானதுமான பாரபட்சங்கள், அரசியல் பழிவாங்கல்கள், இன மற்றும் சாதி அடக்குமுறைகள், முக்கிய தீர்மானங்களை மேற்கொள்வதில் அவர்களின் வகிபாகமின்மை போன்ற சமூக பொருளாதார காரணிகள் அவர்களிடையே பொதுவானதொரு அமைதியின்மையை உருவாக்கியுள்ளதாகவும் தகவல்கள் வலியுறுத்துகின்றன.

### தேசிய வருமான ஈட்டல்

இந்த வகையில் நாட்டின் ஏனைய இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கும் மலையக இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுள்ளது. கடந்த 2016ம் ஆண்டின் தகவலொன்றின்படி பெருந்தோட்ட இளைஞர்களிடையே வேலையின்மையும், கீழுழைப்பும் அதிகரித்து காணப்படுவதாக தெரிய வருகின்றது. 14 -18 வயதினரிடையே வேலையின்மை வீதம் 37.6 ஆகவும், 19 - 25 வயதினரிடையே 18.7 வீதமாகவும் இது காணப்பட்டது. மலையக இளைஞர்களின் கல்வி நிலைமைகளில் முன்னதாக இருந்து வந்த வீழ்ச்சிப் போக்கு உள்ளிட்ட பல காரணங்கள் கீழுழைப்பில் அவர்கள் ஈடுபட வாய்ப்பளித்தது. தொழில்திறன் குறைந்த நிலைமைகள், வறுமை போன்றனவும் இதில் செல்வாக்கு செலுத்தி இருந்ததையும் இங்கு குறிப்பிட்டுக் கூறுவது பொருத்தமாகும். படித்த இளைஞர்களில் பெரும்பாலானோர் எதுவித தொழிற்பயிற்சியும் இல்லாது பல பிரச்சினைகளுக்கும் உள்ளாகி வருவதாக தொடர்ச்சியாகவே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. முறையான தொழிற்பயிற்சி பெற்றோருக்கு பல்வேறு தொழில் வாய்ப்புகள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் காணப்படுகின்றன. எனவே அடிப்படை கல்வி பெற்ற இளைஞர்கள் தம்மை ஏதாவது ஒரு தொழிலுக்கு பயிற்றுவித்துக் கொள்ளுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தல்கள் இருந்து வருகின்றன.



இதேவேளை மலையக பெண்களின் தொழில் நிலைமைகள் குறித்து பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.விஜயச்சந்திரன் பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டி இருக்கின்றார். ஒருவர் புரியும் தொழிலின் தன்மையானது அவரது தொழில் உரிமைகள், தொழில் நிலைமைகள் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பவற்றை தீர்மானிக்கும். இந்த வகையில் தோட்டத்துறை சாராத தொழில்களில் ஈடுபட்டுள்ள மலையக இளம் பெண்கள் புரியும் தொழில்களின் தன்மையை ஆராய்கையில், அவர்களில் 72.92 வீதத்தினர் தற்காலிக அல்லது நிரந்தரமற்ற தொழில்களிலும், 27.06 வீதத்தினர் நிரந்தர தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். நிரந்தர தொழில் தன்மையைக் கொண்டோர் பெரும்பாலும் அரசாங்கத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோராகவும், தற்காலிக தொழில்களில் ஈடுபட்டுள்ள இளம் பெண்களில் பெரும்பகுதியினர் தனியார் வர்த்தக நிலையங்கள், ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளோராகவும் காணப்படுகின்றனர். மேலும் தோட்டத்துறையற்ற தொழில்களை நாடும் இளம் மலையக பெண்களில் 63.53 வீதத்தினர் நகரத்துறையிலும், 4.71 வீதத்தினர் கிராமியத்துறையிலும், 28.82 வீதத்தினர் தோட்டத்துறைக்குள்ளே பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அல்லாத ஏனைய தொழில்களிலும், 2.94 வீதத்தினர் வெளிநாட்டுத் துறையிலும் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இப்பெண்களில் 2.35 வீதத்தினர் மட்டுமே அரச நிறுவனங்களில் தொழில் புரிகின்றனர். 52.37 வீதத்தினர் தனியார் கம்பனிகள் மற்றும் தனியார் வியாபார நிலையங்களிலும், 12.94 வீதத்தினர் அரசசார்பற்ற அமைப்புக்களிலும், 17.06 வீதத்தினர் தனியார் வீடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாகவும் பணியாற்றி வருகின்றனர். தேசிய வருமான ஈட்டலில் மலையக இளம் பெண்களின் பங்களிப்பு அதிகமாகவுள்ளது. தேயிலைத் தொழிற்றுறை, ஆடைத் தொழிற்றுறை, மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு என்பவற்றின் ஊடாக கணிசமான வருவாயை மலையக இளம்பெண்கள் நாட்டிற்கு பெற்றுக் கொடுக்கின்றனர் என்றால் மிகையாகாது.

### பயிற்சித் திட்டங்கள்

இதேவேளை தோட்டப்புற இளைஞர்களிடையே அபிவிருத்தியை ஏற்படுத்த அவர்களது மனிதவள அபிவிருத்தி தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதும் அவசியமாகும். தோட்டத்துறைக்கு வெளியே வேலை வாய்ப்புக்களை பெறுவதற்குத் தேவையான வினைத்திறன்களை அவர்களிடையே அபிவிருத்தி செய்தல். தோட்டங்களுக்கு வெளியே சுயதொழில்களில் ஈடுபடுவதற்கும் வருமானம் உழைப்பதற்குமான அவர்களது முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்தல். தோட்டங்களுக்கு உள்ளேயே மேலதிக வருமானத்தை உழைத்துக் கொள்வதற்குத் தேவையான வினைத்திறன்களை உருவாக்குதல். தோட்ட விவசாயத்திற்கும் வேறு உற்பத்தித்துறை நடவடிக்கைகளுக்கும் தேவையான வினைத்திறன்களை மேம்படுத்தல்.




தோட்டங்களோடு தொடர்பான ஆதாரத் தொழில் சார்ந்த வினைத்திறன்களை மேம்படுத்தல். தோட்ட இளைஞர்களின் மனப்பாங்குகளை மாற்றுவதன் மூலமும், பெண்களின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் வழங்கும் அரிய சந்தர்ப்பம்! பொதுவாக்கெடுப்பே எமது விடுதலையின் பொறிமுறை!! வீட்டுக் கல்வியின் பங்களிப்பு

Tamil Americans United
Political Action Committee



ஈழத்தமிழ் மக்கள் சார்பாக, பலதரப்பட்ட சமூக அமைப்புகளும், அவைகளுடன் சேர்ந்து, பல முக்கிய தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும் இணைந்து, இம்முறை இலங்கை அரசினால் செப்ரம்பர் 21 இல் நடத்தவுள்ள சனாதிபதி தேர்தலில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க முடிவு செய்துள்ளது வரவேற்கக் கூடியது மட்டுமன்றி, அது தமிழர்களின் ராஜ தந்திர அணுகுமுறை ரீதியில் பார்க்கப்பட வேண்டிய தொன்று.

76 வருட சிங்கள ஏமாற்று அனுபவங்களை புறந்தள்ளி, சிங்களத் தலைவர்கள் எமது உரிமைகளை வெள்ளித்தட்டில் தருவார்கள் என்று எதிர்பார்த்து, அவர்களுக்கு மீண்டும் மீண்டும் எமது மக்களை வாக்களிக்க வைக்கும் தன்மான மற்ற கேலிக்குரிய நடைமுறை, இப்போது நிறுத்தப்பட்டுள்ளதையிட்டு நாம் பெருமை கொள்ளமுடியும். இத்தேர்தலின் மூலம், சர்வதேச சமூகத்திற்கு நாம் ஒரு செய்தியை அனுப்ப வேண்டிய பாரிய தேவை எமக்கு உண்டு. எமது அரசியல் விவகாரம், ஏற்கனவே ஐ.நா. இல் உள்ள ஒரு சர்வதேச பிரச்சினை ஆகும். சர்வதேச பிரச்சினைக்கு, சர்வதேச தீர்வை நாம் சர்வதேசத்திடம் கோர வேண்டும். சர்வதேசத்தின் நேரடித் தலையீட்டுடன் மாத்திரமே, எமக்கு சர்வதேச தரத்திலான தீர்வு கிடைக்கும்.

எமது அரசியல் பிரச்சினையானது, 1619 இல் போர்த்துக்கீசர் படை, எம் அரசன் சங்கிலி குமரனின் இராஜ்யத்தை அழித்ததில் இருந்து ஆரம்பிக்கின்றது. ஆங்கிலேயர் 1833 இல், தமிழ் தேசத்தை சிங்கள தேசத்துடன் ஒற்றையாட்சி அரசாங்கத்தின் கீழ் இணைத்த போது அது இன்னொரு வடிவத்தை எடுக்கின்றது. 1948 இல் ஆங்கிலேயர்கள் சிங்களவர்களுக்கு சுதந்திரம் வழங்கியபோது, தமிழர்கள் சிங்களவர்களின் கீழ் தள்ளப்பட்டு, எமது அரசியல் பிரச்சினை தற்போதைய வடிவத்தை எடுக்கின்றது.

1948 இல், ஆங்கிலேயர்கள், தமது ஆட்சியை சிங்களவர்களிடம் ஒப்படைத்த போது தமிழர்களிடம் அதற்கு சம்மதம் எடுத்திருக்கவில்லை. தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. 1619 இற்கு பின்னர் தமிழர்களுக்கு சுதந்திரம் ஒருபோதும் கிடைக்கவில்லை. சிங்களர்களின் கீழ் வாழ்வதற்கு தமிழர்கள் ஒருபோதும் சம்மதிக்கவும் இல்லை. எனவே, இது ஒரு முறையற்ற மற்றும் முழுமையற்ற காலனித்துவ நீக்கம் (improper and incomplete decolonization) ஆகும். இது சர்வதேச சட்டங்களின்படி கையாளப்பட வேண்டிய விடயமாகும்.

சிங்களவர்களால் மேற்கொள்ளப்பட்டதும், இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதுமான தமிழின அழிப்பு, அடக்குமுறை, உரிமை மறுப்பு, நிலப்பறிப்பு, ஆலய அழிப்பு, துயிலும் இல்ல அழிப்பு, சிங்களமயமாக்கல் போன்றவை, எமது பிரச்சினையை அவசர மற்றும் அவசியமான விடயமாக ஆக்குகின்றது. நாம் அவசரமாக செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன.

30 வருட அகிம்சை போராட்டமும், 30 வருட ஆயுதப் போராட்டமும் எமது விவகாரத்தை இன்று சர்வதேச அரங்கில் நிறுத்தி வைத்துள்ளது. அதில் வீரகாவியங்கள் பல படைத்து தமிழ் வீரர்கள் கொடுத்த தியாகங்கள் எண்ணிலடங்காது! அது விலைமதிப்பற்றது. அதனை வீணாக்காது, எஞ்சி இருக்கும் தூரத்தை, பாரிய போராட்டங்கள் எதுவுமின்றி, எமது சாதுர்ய மூலோபாயத்துடனும், சர்வதேச ராஜதந்திர வியூகத்துடனும் நாம் அடைய முடியும், அடைய வேண்டும். அதற்குரிய அடிப்படை வேலைகளை இம்முறை, பொது வேட்பாளர் மூலமாக நாம் செய்ய வேண்டிய பாரிய தேவை எமக்குண்டு! இன்று எமது விடுதலைப் போராட்டம் மூன்றாம் கட்டத்தில் நிற்கின்றது - இன்றைய கட்டம் இராஜதந்திர மூலோபாயம் ஆகும்.

சர்வதேச சட்டத்தின் படியும், ஐ. நா. தீர்மானங்களின் மூலமும், ஈழத்தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கும், பூரண சுதந்திரத்திற்கும் தகுதியானவர்கள். பொதுவாக்கெடுப்புக்கான பூரண உரிமை எமது மக்களுக்கு உண்டு. அவ்வாறான ஒரு பொதுவாக்கெடுப்பின் மூலமாகத்தான் எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை நடைமுறைப் படுத்த முடியும். சர்வதேச நியதிகளின்படி, இந்த பொதுவாக்கெடுப்பு தாயகத்தில் உள்ள தமிழர்களையும் புலம்பெயர் தமிழர்களையும் வாக்களிக்க அனுமதிக்கும்.

சுயநிர்ணயம் என்பது மக்களால் நேரடியாக தீர்மானிக்கப்பட வேண்டுமே தவிர ஒரு சில அரசியல்வாதிகள் அல்லது ஒரு சில அரசியல் கட்சிகளால் அல்ல. மக்கள் பிரதிநிதிகளால், அதி முக்கிய விடயங்களை மக்களுக்காக தீர்மானிக்க முடியாது, அது சுயநிர்ணயம் ஆகாது. சுதந்திரத்திற்கான பொது-வாக்கெடுப்பின் மூலம் மட்டுமே நாம் எமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க முடியும்.

பதின்மூன்று, சமஷ்டி, அதிகாரப்பகிர்வு போன்ற உள்நாட்டுத் தீர்வை நாம் கோரி, சர்வதேசப் பிரச்சினையை உள்நாட்டு நிர்வாகப் பிரச்சினையாக மாற்றக் கூடாது. உள்நாட்டுப் பிரச்சினையில் சர்வதேச சமூகம் தலையிடாது. எங்களின் விவகாரம் சர்வதேச பிரச்சினை, அதனை மாற்றாது, நாம் சர்வதேசத் தீர்வை, சர்வதேச சமூகத்திடம் கோர வேண்டும்.

சில தமிழ் கட்சிகள் மீண்டும் சமஷ்டி கோரிக்கையை முன் வைக்கின்றன. 30 வருட கடின சுதந்திரப் போராடத்திற்குப் பின்னர், நாம் மீண்டும், 48 ஆண்டுகளுக்கு முன்பு கைவிட்ட அதே சமஷ்டியை கோரினால், தமிழ் மக்கள் தமக்கு என்ன வேண்டும் என்பதில் தெளிவற்றவர்களாக உள்ளோம் என்ற தவறான செய்தியை சர்வதேச சமூகத்திற்கு அனுப்புவதாக இருக்கும். 74% பலம் பொருந்திய, இனத்துவேசம் கொண்ட சிங்களவர்களுடன், சமஷ்டி, அதிகாரப்பகிர்வு போன்ற உள்நாட்டு நடைமுறைகள் வேலை செய்யாது! அதன் மூலம், தமிழர்க்கு போதிய பாதுகாப்பை கொடுக்க முடியாது, மீண்டும் ஒரு இனப்படுகொலையை தடுக்க முடியாது. இது போன்ற பிரச்சனைகள், சமஷ்டி போன்ற உள்நாட்டு தீர்வுகளினால் தீர்க்கப்பட்டதற்கு உலக உதாரணங்கள் கிடையாது. தமிழ் இனப்படுகொலையை சில நாடுகள் அங்கீகரித்த பின்னரும் நாம், எம்மை அழிக்கத் துடிக்கும் சிங்களர்களின் கீழ் வாழ கட்டாடயப்படுத்த முடியாது. அவர்களின் ஆதிக்கத்திற்கு அப்பால் உள்ள மாற்று தீர்வுகளை நாம் ஆராய வேண்டும்.

இதே போன்ற பல பிரச்சினைகள் ஐ.நா. அல்லது சர்வதேச சமூகத்தால் நடத்தப்பட்ட பொதுவாக்கெடுப்பு மூலம் சர்வதேச சமூகத்தால் தீர்க்கப்பட்டுள்ளன. இதற்கு பல உலக உதாரணங்கள்உண்டு. சுதந்திரத்திற்கானபொதுவாக்கெடுப்பு மூலம் சுதந்திரம் பெற்ற தென்-சூடான், மாண்டினீக்ரோ, கிழக்கு-திமோர், பொஸ்னியா, எரித்திரியா, கொசோவோ போன்றவை சில உதாரணங்களாகும். இதுவே உலக யதார்த்தம். இந்த யதார்த்தத்தை புரிந்து, சர்வதேசத்திடம் உள்நாட்டுத் தீர்வை கேட்காது, சர்வதேசத் தீர்வை கோர வேண்டும். எமது அரசியல் தீர்வு, அமைதியாகவும் சனநாயகமுறையிலும், எமது சுயநிர்ணய உரிமையை நடைமுறைப்படுத்தும் முறையில், ஐ. நா. அல்லது சர்வதேச சமூகத்தினால் நடாத்தி, கண்காணிக்கப்படுகின்ற ஒரு பொதுவாக்கெடுப்பு மூலமாக காணப்படல் வேண்டும். எனவே , எமக்கான தீர்வு ஒரு பொதுவாக்கெடுப்பு மூலமாகத்தான் காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நாம் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்த வேண்டும்.

சுதந்திரத்திற்கான பொதுவாக்கெடுப்பு அணுகுமுறை விடுதலைப் புலிகளின் காலத்திலேயே பரிந்துரைக்கப்பட்டு வரவேற்கப்பட்ட ஒரு பொறிமுறையாகும். மார்ச் 05, 2009 இல், அமெரிக்கா கலிபோர்னியா மாநிலத்தின் சாண்டா கிளாரா மாவட்ட சனநாயக கட்சியின் மத்திய குழு நிறைவேற்றிய தீர்மானத்தில், ஐ.நா இனால் நடாத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்ற ஒரு பொதுவாக்கெடுப்பின் மூலம் ஈழத்தமிழர்களின் சுதந்திரம் தீமானிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டிருந்தது. அதனை தாம் வரவேற்பதாகவும், எமது மக்களின் விருப்பத்திற்கு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தோல்வியடையும் அணிசேராக் கொள்கை இலங்கையும் தப்ப முடியாது

வேல்ஸில் இருந்து அருஸ்

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முறுகல் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. கடந்த ஜூன் மாதம் வொசிங்டனில் இடம்பெற்ற நேட்டோ கூட்டமைப்பின் 75 ஆவது ஆண்டு விழாவன்று இந்திய பிரதமர் ரஸ்யாவுக்கு சென்று ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டினுடன் விருந்துசாப்பிட்டதும்வர்த்தகமற்றும்படைத்துறை உறவுகளை வலுப்படுத்தியதும், அமெரிக்காவுக்கு அதிக சினத்தை ஏற்படுத்தியிருந்தது.




மோடி செல்லும் தினத்தையாவது மாற்று மாறு புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதுவர் இந்தியாவிடம் முன்வைத்த கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டது.

**இந்தியாவின் இந்த சினத்திற்கு காரணம் என்ன?**

இந்தியாவில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில்காங்கிரஸ்கட்சியைஅமெரிக்காமறைமுகமாக ஆதரித்ததுடன், நரேந்திரமோடி அரசு மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடுவதாகவும், எதிர்க்கட்சிகள் மீது பொய்யான நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாகவும் அமெரிக்கா தலைமையிலான அரச சார்பற்ற நிறுவனங்களும் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் மோடி அரசின் வாக்கு வங்கியின் வீழ்ச்சிக்கு காரணம் என பாரதிய ஜனதாக்கட்சி எண்ணியிருந்தது.

மேலும் கனடா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியாவில் உள்ள காலிஸ்த்தான் அமைப்பினரை அந்த நாடுகள் பாதுகாத்து வருவதும் இந்தியாவின் சினத்திற்கு காரணம். ஹர்தீப் சிங்கின் படுகொலை மற்றும் அமெரிக்காவின் நியூயோர்க்கில் வைத்து காலிஸ்த்தான் அமைப்பின் தலைவரும் ஹர்தீப் சிங்கின் நண்பருமான பன்னும் மீதான தாக்குதல் முயற்சி தொடர்பில் செக் குடியரசில் வைத்து கைது செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்பட்ட நிகில் குப்தா தொடர்பாகவும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் முரண்பாடுகள் வலுத்திருந்தன. இந்த நிலை தான் மோடியின் சினத்திற்கு காரணம்.

வழமைபோல இரு தரப்பையும் தமது வழிக்கு



கொண்டுவரும் தனது அணிசேராக் கொள்கையை இந்தியா மீண்டும் பயன்படுத்த முயற்சித்துள்ளது.

ஒரு தரப்புடன் நட்புறவை அதிகரிப்பது போல் காண்பித்து மறு தரப்பை வழிக்கு கொண்டு வர இந்தியா எடுத்த முயற்சி என்பது முன்னர் பலனளித்திருந்தாலும் தற்போது அது இந்தியாவை பாதாளத்தில் தள்ளியுள்ளது.

ஏனெனில் வளர்ந்துவரும் சீனா என்ற வல்லரசுக்கும் 1991 ஆம் ஆண்டு சோவியத்து ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கு பின்னர் உலக வலரசாக வலம் வந்த அமெரிக்காவுக்கும் இடையிலான தற்போதைய போட்டி என்பது மிகவும் தீவிரமான கட்டத்தில் உள்ளது. சீனாவின் மிக நெருங்கிய நண்பனான ரஸ்யா மீது உக்ரைனை பயன்படுத்தி நேட்டோ மேற்கொண்டுவரும் போரும், அதற்கு பதிலடியாக இஸ்ரேல் - பலஸ்தீனப் போரை ரஸ்யா உருவாக்கியது என்பதும் நாம் அறிந்ததே.

ஆனால் உக்ரைன் போரும், இஸ்ரேல் பாலஸ்தீனப் போரும் மேற்குலகம் எதிர்பார்த்த திசையில் செல்லவில்லை என்பதால் அவர்களின் வெளிவிவகார, பொருளாதார மற்றும் பாதுகாப்பு கொள்கைகள் மேலும் இறுக்கமாகி வருகின்றது.

எனவே தான் மோடியின் ரஸ்ய பயணத்திற்கு பதிலடியாக கடந்த ஜனவரி மாதம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று 16 ஆவது வருடத்தில் காலடியெடுத்து வைத்த சேக் ஹசீனா அரசை அதிரடியாக பதவியில் இருந்து தூக்கி எறிந்திருந்தது அமெரிக்கா.



1975 ஆம் ஆண்டு ஹசீனாவின் தந்தையார் உட்பட முழு குடும்பமும் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் ஹசீனாவையும் அவரின் தங்கையையும் பாதுகாத்து வைத்திருந்த முன்னாள் இந்திய பிரதமர் இந்திரா காந்தி பின்னர் சமயம் பார்த்து மீண்டும் பதவியில் அமர்த்தி இழந்த பூகோள அரசியல் வெற்றிடத்தை தக்கவைத்திருந்தார்.

அதேநிலையை மீண்டும் தக்கவைக்க இந்தியா முயன்று வருகின்றது. எனவே தான் ஹசீனாவுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளது. ஆனால் அது நிறைவேறப்போவதில்லை என்பதை அமெரிக்கா தெளிவாக இந்தியாவுக்கு சொல்லியுள்ளது. அதாவது பங்களாதேசத்தில் இடம்பெற்ற மாணவர் புரட்சியின் போது ஏறத்தாள 400 பேர் படுகொலை செய்யப்பட்டது மற்றும் 30,000 பேருக்கு மேற்பட்ட மக்களுக்கு காயங்களை ஏற்படுத்தியது தொடர்பில் ஹசீனா மீது தற்போதைய மொகமட் யூனீஸ் அரசு வழக்குகளை தொடுத்துள்ளதுடன், ஹசீனாவை நாடுகடத்தும் படியும் கோரியுள்ளது.

ஹசீனாவுக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்திருப்பது இரு நாட்டு உறவுகளையும் பாதிக்கும் எனவே அவரை நாடுகடத்தும் படி உத்தியோகபூர்வ கோரிக்கையை விடுப்பது தொடர்பில் எமது இடைக்கால அரசு முடிவெடுக்கும் என அதன் வெளிவிவகாரத்துறை ஆலோசகர் தோஹிட் குசைன் தெரிவித்துள்ளார்.

ஒரு குற்றவாளிக்கு இந்தியா அடைக்கலம் கொடுப்பது என்பது தன்னை ஜனநாயக நாடு என அழைக்கும் இந்தியாவின் கொள்கைகளுக்கு எதிரானது என பி.என்.பி கட்சியின் செயலாளர் இஸ்லாம் அலம்ஹீர் தெரிவித்துள்ளார். குற்றம் செய்தவர்களை நாடு கடத்தும் உடன்பாடு இரு நாடுகளுக்கும் இடையில் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் அது அரசியல்வாதிகளுக்கு பொருந்தாது என இந்திய ஊடகமான த ரைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.



அதேசயம், அரசியல் புகலிடம் கோரி பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிடம் ஹசீனா விடுத்த வேண்டுகோளையும் அந்த நாடுகள் நிராகரித்துள்ளன.

இந்த நிலையில் தான் மேற்குலகத்தின் சீற்றத்தை தணிக்கும் முயற்சியாகவும், தனது அணிசேராத வெளிவிவகாரக் கொள்கை என்ற நாடகத்தை மீண்டும் நிறைவேற்றவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவசர அவசரமாக உக்ரைனுக்கும், போலந்துங்கும் சென்றிருந்தார்.

1991 ஆம் ஆண்டு உக்ரைன் சுதந்திரம் அடைந்த பின்னர் அங்கு சென்ற முதலாவது இந்திய பிரதமர் மோடியாவார். அது மட்டுமல்லாது உக்ரைன் அதிபரை கட்டி தழுவியதுடன், மருத்துவப் பொருட்களையும் உதவியாக வழங்கியிருந்தார். மேலும் ரஸ்யாவின் தாக்குதலினால் உயிரிழந்தவர்களின் நினைவு நிகழ்விலும் கலந்து கொண்டிருந்தார்.

அது மட்டுமல்லாது உக்ரைன்-ரஸ்ய போரில் பின்தளமாக விளங்கும் போலந்துக்கும் சில பத்து வருடங்களின் பின்னர் செல்லும் இந்தியா பிரதமராக மோடி சென்றிருந்தார். இந்தியாவில் புதிதாக பதவியேற்ற மோடி மணிப்பூருக்குச் கூட செல்லாது உக்ரைன் சென்றது ஆச்சரியமானது என இந்திய அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமல்லாது கடந்த 17 ஆம் நாள் இடம்பெற்ற தென்மண்டல நாடுகளுக்கான கூடத்தை நடத்திய இந்தியா சீனாவுக்கும்,

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# பூகோள வெப்பமாதலால் உயரும் கடல் மட்டமும் அதனால் பாதிக்கப்படும் பசிபிக் நாடுகளும்

“வளிமாசுபடுதல் பிரச்சினைக்கு அதிகளவில் காரணமாக இருக்கும் நாடுகளுக்கு, அந்த நாடுகள் வெளியிடும் காபனீரொட்சைட் வாயுவின் அளவைக் குறைப்பதில் அதிக பொறுப்பும் பங்கும் இருக்கிறது. அவ்வாறு இல்லாவிட்டால், உலகளாவிய பேரிடர் தவிர்க்கமுடியாததாகிவிடும்” என்று ஐக்கிய நாடுகளின் செயலர் நாயகம் அன்ரோனியோ குற்றெரேஸ் அண்மையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.



பசிபிக் பிராந்தியம் உலகிலேயே மிக அதிகமாகப் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறது என்று ரொங்காவில் நடைபெற்ற பசிபிக் தீவு மன்றத்தில் அங்கம் வகிக்கும் தலைவர்களுக்காக நடந்த சந்திப்பில், செயலர் நாயகம், பிபிசி ஊடகத்துக்குத் தெரிவித்தார். பசிபிக் தொடர்பாக பாரிய அளவில் அநீதி இழைக்கப்படுகிறது. அக்காரணத்தினாலே தான், நான் தற்போது இங்கு வந்திருக்கிறேன். காலநிலை மாற்றத்துக்கு சிறிய தீவுகள் காரணமல்ல. ஆனால் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் இந்தப் பிரதேசத்தில் மிகவும் அதிகமாகவே உணரப்படுகின்றன.

விரைவாக அதிகரித்துவரும் கடல்மட்டம் தொடர்பாகவும், பசிபிக் தீவுகளில் உள்ள நாடுகள் இதனால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது தொடர்பாகவும், இரண்டு வெவ்வேறான அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் வெளியிட்டு வைக்கும் இத்தருணத்தில், “இவற்றின் விளைவாக கடல் மட்டம் அதிவிரைவாக அதிகரிப்பதனால், கடல் எம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது” என்று அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

கடல் மட்டம் அதிகரித்தல், சமுத்திரம் வெப்பமடைதல், அதன் அமிலத்தன்மை அதிகரித்தல், போன்ற மூன்று வகையான விளைவுகளை கடல்மட்டம் விரைவாக அதிகரித்து வருவதன் காரணமாக இக்குறிப்பிட்ட பிரதேசம் சந்தித்துவருகிறது. கடல் அதிகமான காபனீரொட்சைட்டை உள்வாங்குவதன் காரணமாகவே கடலின் அமிலத்தன்மை தொடர்ந்து அதிகரித்து வருவது இவ்வாறான விளைவுகளுக்குக் காரணமாகும்.

இதற்கான காரணம் மிகவும் தெளிவானது. பசுமை இல்ல வாயுக்களே இதற்கான காரணமாகும். படிம எரிபொருளை எரிப்பதன் காரணமாகவே இந்த வாயுக்கள் அதிகமாக வெளியேற்றப்படுகின்றன. இதனால் பூமி பொசுங்கிக் கொண்டிருக்கிறது.” என்று ஓர் உரையில் செயலர் நாயகம் குறிப்பிட்டார். “உண்மையில் வெப்பத்தைக் கடல் தான் உள்வாங்குகிறது.”

‘மாற்றியமைக்கின்ற தாக்குப்பிடிக்கும் ஆற்றல்’ *(Transformative resiliency)* என்பது இந்த ஆண்டுக்கான கருப்பொருளாகும். இவ்விடயம் நிகழ்வின் முதல் நாளே சவாலுக்குள்ளாக் கப்பட்டது. கனமழை காரணமாக, கேட்போர் கூடத்துள் மழைநீர் உட்புக, அக்கணம் ஏற்பட்ட நிலஅதிர்வு காரணமாக கட்டடங்களுக்குள் இருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள்.

“எங்களது பிரதேசத்தில் நிலைமை எவ்வாறாக கணத்துக்குக்கணம் மாற்றமடைந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டு. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களை எதிர்கொள்ள எவ்வாறு நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதையும் இவை சுட்டிக்காட்டுகின்றன” என்று காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் அமைப்பான 350 இன் பசிபிக் இயக்குநரான ஜோசவ் சிக்குலு பிபிசிக்குத் தெரிவித்தார்.

சந்திப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்துக்கு அருகில், வீதியில் ஓர் ஊர்வலம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ரொர்றெஸ் நீரிணைத் தீவுகள், ரொங்கா, சமோவா போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள் அங்கே நடனமாடிக் கொண்டிருந்தார்கள். ஊர்வலம் ஆரம்பிக்கும் இடத்தில் ஒரு பதாகை இருந்தது, “ நாங்கள் கடலுக்குள் மூழ்கவில்லை, நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம்.” “கடல் மட்டம் உயர்கிறது. அதே வேளை நாங்களும் உயர்கிறோம்.” போன்ற வாசகங்கள் அங்கே எழுதப்பட்டிருக்கின்றன.



அவர்களது உலகத்தை இல்லாதொழிக்கக் கூடிய ஒரு சவாலை இவை எதிரொலிக்கின்றன. “வெப்பமாகும் உலகில் நாளுக்கு நாள் உயரும் கடல்மட்டம்” என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த 3000 வருடங்களில் என்றுமே இல்லாதவாறு காலநிலை மாற்றத்தின் காரணமாக கடல் மட்டங்கள் உயர்ந்துகொண்டிருக்கின்றன என்று இந்த அறிக்கை எச்சரிக்கை செய்கிறது.

“வெளியிடப்பட்ட அறிக்கையின் படி, கடந்த 30 வருடங்களில் சராசரியாக 9.4 சென்றிமீற்றருக்கு (3.7 அங்குலம்) கடல் மட்டம் உயர்ந்திருக்கிறது. ஆனால் உலர்வலயத்தைக் கொண்டுள்ள பசிபிக் பிரதேசத்தில் 15 சென்றி மீற்றர் ஆகப்பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. அவுஸ்திரேலியா மற்றும் ஆயோற்றெயாறோவா போன்றவற்றின் தலைவர்கள் இதனை இங்கே நேரில் வந்து பார்க்க வேண்டும். அதுமட்டுமன்றி இந்தப் பிரதேசத்து மக்கள் இதனை எதிர்த்து எவ்வாறு போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் இங்கே நேரில் வந்து பார்க்க வேண்டும்.”

தமிழில்: ஜெயந்திரன்

என்று சிக்குலு மேலும் கூறினார்.

தொங்காப் பண்பாட்டின் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால் கடினமான சூழலிலும் மகிழ்வாக இருப்பதாகும். எமது தாக்குப்பிடிக்கும் ஆற்றலை அவ்வாறு தான் நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம். அதற்கு சான்று பகருவது எம்மைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானதாகும்.

பசிபிக் தீவுகள் மன்றத்தின் தலைவர்கள் சந்திப்பில் செயலர் நாயகம் பங்குபற்றியிருப்பது இது இரண்டாவது தடவையாகும். இந்த வருடாந்தச் சந்திப்பில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட 18 பசிபிக் தீவுகளின் தலைவர்கள் இந்தச் சந்திப்பில் பங்குபற்றுவார்கள்.

இந்த சந்திப்பு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்ட போது, அந்த ஆரம்ப விழாவின் போது பலத்த மழை பெய்ததுடன், அங்கு வெள்ளமும் ஏற்பட்டது. அதற்கு சிறிது நேரத்தின் பின் 6.9 றிச்டர் அளவிலான நிலஅதிர்வு தொங்கா பிரதேசத்தில் உணரப்பட்டது. அங்கு நிலைமை எவ்வளவு ஆபத்தாக இருக்கிறது என்பதை இவற்றின் மூலம் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

2019ம் ஆண்டு, துவாலுவுக்குப் பயணம் செய்த செயலர் நாயகம், உயரும் கடல்மட்டம் தொடர்பான எச்சரிக்கையை விடுத்தார். “ஐந்து வருடங்களின் முக்கிய மாற்றங்களைத் தான் காணக்கூடியதாக இருப்பதாக” அவர் சுட்டிக்காட்டினார். ஆபத்தைத் தடுப்பதற்கான மிகவும் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய எதிர் விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அவர் பிபிசிக்குத் தெரிவித்தார். பிரச்சினை என்னவென்றால் பசிபிக் தீவுகள் இன்னொரு பெரும் அநீதியையும் சந்திக்கின்றன. நெருக் கடிகளைச் சந்திக்கும் நாடுகளுக்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்டுள்ள நிதிக்கட்டமைப்புகள் இவ்வாறான நாடுகளுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்படவில்லை.



உயரும் கடல்மட்டத்தின் காரணமாக தமது வாழ்வாதாரங்களுக்கான ஆபத்தை எதிர்கொள்ளும் சமூகங்களை திங்கட்கிழமை செயலர் நாயகம் சந்தித்தார். கடலை மறித்து ஒரு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## வினைத்திறன் ... தொடர்ச்சி ...

பங்கெடுப்பு, பால் தொடர்பான பிரச்சினைகள், மேலதிக வருமானத்தை உழைத்தல் என்பன குறித்த அவர்களது அறிவினை வளர்ப்பதன் மூலம் தோட்டக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் எனப்பலவும் இதில் உள்ளடங்கும்.

அத்தோடு இளைஞர்களின் தொழிற்சார் பயிற்சி, தொழிநுட்ப வினைத்திறன், பொது அறிவு போன்றவற்றை உயர்த்தும் நோக்கில் ஐந்து வகையான பயிற்சி நெறிகளும் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தன. அறிவுசார் பயிற்சித் திட்டங்கள், மைய வினைத்திறன் அபிவிருத்தி பயிற்சித் திட்டங்கள், தொழில்சார் பயிற்சித் திட்டங்கள், முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சித் திட்டங்கள், தோட்ட வேலைகளுக்கு பயன்படக்கூடிய பயிற்சித் திட்டங்கள் போன்றன அந்த ஐந்து வகையான பயிற்சித் திட்டங்களுமாகும். இப்பயிற்சித் திட்டங்கள் சரியான முறையில் நடத்தப்படுவதுடன் இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்றும் இளைஞர்களும் ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் பங்குபற்ற வேண்டும். இதன் மூலம் அவர்களின் மனிதவளம் படிப்படியாக அபிவிருத்தியடைந்து நாட்டின் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களோடு அவர்க ளும் சரிநிகர் சமானமாக தலைநிமிர்ந்து நிற்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமா னால் அந்நாட்டு மக்கள் அனைவருமே முன்னேற்றமடைந்திருக்க வேண்டியது அவசியமாகும். பின்தங்கிய மக்களைக் கொண்ட ஒருநாடு எவ்வளவுதான் செல்வம் மிக்கதானாலும் அதனை அபிவிருத்தி அடைந்த நாடென்று கருதமுடியாது என்பார்கள். இந்த வகையில் பின்தங்கிய வெளிப்பாடுகளைக் கொண்டு விளங்கும் மலையக மக்களின் வாழ்க்கைப் போக்குகளில் அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. இவற்றுள் இளைஞர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பில் பூரண கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

### விசேட ஜனாதிபதி ஆணைக்குழு

மலையக இளைஞர்கள் உட்பட நாட்டின் பல இளைஞர்களும் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்ற நிலையில் எதிர் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் கவனம் இதுபற்றி திரும்பியுள்ளது. இந்நிலையில் இளைஞர்களை மையமாகக் கொண்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை ஸ்தாபித்து, இளைஞர்களின் உரிமைகளை பாதுகாக்கும் பாரிய தேசிய பொறிமுறையொன்று தனது ஆட்சியில் ஜனாதிபதியின் மேற்பார்வையின் கீழ் ஸ்தாபிக்கப்படும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார். நமது நாட்டு இளைஞர்கள் சந்தர்ப்பவாதமாக பல்வேறு கொள்கை வகுப்பாளர்களால் சுரண்டப்பட்டு பயன்படுத்தப்பட்டாலும், நமது நாட்டிற்கு நிலையான தேசிய இளைஞர் கொள்கையொன்று அவசியமாகும். தேசிய இளைஞர் கொள்கையை உருவாக்கி அந்த நிலையான கொள்கையின் மூலம் இளைஞர்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளை உணர்ந்து ஒரு நிலையான தேசிய திட்டத்தை ஆரம்பிக்க உள்ளதாகவும் சஜித் தெரிவித்துள்ளார். இலகுவில் மாற்றமுடியாத ஒரு சரத்தாக இளைஞர்களுக்கான உரிமையை அரசியலமைப்பில் உள்ளடக்குவது காலத்தின் தேவையாகும். தேசிய இளைஞர் கொள்கைக்காக தேசிய இளைஞர் சாசனத்தை வகுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கட்டளைச் சட்டங்களின் ஊடாக இளைஞர் ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்படும்.

இளைஞர்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய கல்வி சீர்திருத்தங்கள், திறன் விருத்தி, தொழிநுட்பத்திற்கான அணுகல், ஆரோக் கியம் மற்றும் ஊட்டச்சத்துக்கான உரிமை, மேலதிக செயற்பாடுகளுக்கான உரிமை, தொழில் முனைவு, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள், சுற்றுச்சூழல் கல்வி, டிஜிட்டல் கல்வியறிவின் விருத்தி, சமுதாய நடவடிக்கைகளில் இளைஞர்களின் ஈடுபாடு, கல்வி உதவித்தொகை, தேசிய போதைப் பொருள் எதிர்ப்புத் திட்டங்களை செயல் படுத்துதல், பாலின சமத்துவம், இளைஞர் பாதுகாப்பு, இளைஞர்களின் வளர்ச்சியில் பெற்றோர்களின் ஈடுபாடு, தொழில்முறை ஆலோசனை, இளைஞர்களின் தலைமைத்து வம் போன்ற பலவற்றையும் நிறைவேற்று வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இளைஞர்களுடன் ஒரு சமூக உடன்பாட்டை எட்டுவதோடு இளைஞர்களின் அபிலாஷைகளை சரியான கால அட்டவணையின் ஊடாக முன்னெடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என்றும் சஜித் மேலும் தெரிவித்துள் ளமை நோக்கத்தக்கதாகும்.

• • •

## தமிழ் பொது ... தொடர்ச்சி ...

நாம் மதிப்பளிக்க வேண்டும் என்றும், அன்றைய அரசியல் துறை பொறுப்பாளர் திரு. பா.நடேசன் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு கருத்து தெரி வித்திருந்தார்.

தமிழ் நாடு சட்ட மன்ற பேரவையில் 2013 இல் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் முன்மொழிந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம், களத்திலும் புலத்திலும் உள்ள ஈழத்தமிழரால், ஒரு பொதுவாக்கெடுப்பின் மூலம் அவர்களின் எதிர்காலம் தீர்மானிக்கப்பட வேண்டும் என வும், இது சம்பந்தமாக ஐ. நா. பாதுகாப்பு சபையில் தீர்மானம் கொண்டுவருவதற்கு இந்தியா நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோருகிறது.

முதலாவது வடமாகாண சபை, தனது இறுதித் தீர்மானமாக செப்டம்பர் 11, 2018 இல், உறுப்பினர் கௌரவ எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்களால் முன்மொழியப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சி.தவராசா மற்றும் கௌரவ உறுப்பினர் அயூப் அஸ்மின் ஆகியோர்களால் கூட்டாக வழிமொழியப்பட்டு, ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானம், ஐக்கிய நாடுகள் சபையினால் நடத்தி கண்காணிப்படுகின்ற ஒரு பொதுவாக்கெடுப்பின் மூலம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது. இதனைத் தொடர்ந்து செப்டம்பர் 2022 இல் ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 51/L.1, பொதுவாக்கெடுப்பு ஒரு நல்ல விடயம் என்று கூறியிருந்தது.

இவ்வருடம் மே 15, 2024 இல், அமெரிக்கா வாழ் ஈழத்தமிழ் மற்றும் தமிழ்நாடு உறவுகளின் கடின உழைப்பின் பின்னணியில், அமெரிக்கா பிரதிநிதிகள் சட்டசபையில், ஈழத்தமிழர்க்கு, சரித்திர முக்கியம் வாய்ந்த சுதந்திரத்திற்கான பொதுவாக்கெடுப்பு தீர்மானம் 1230, கௌரவ உறுப்பினர் வைலி நிக்கல் அவர்களால் அறி முகப்படுத்தப்பட்ட விடயம், அமெரிக்க அணுகு முறையில் ஒரு பாரிய திருப்புமுனையாகப் பார்க் கப்படுகின்றது.

இவை அனைத்தும் பொதுவாக்கெடுப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. இதுவே, சுயநிர்ணய உரிமையை செயல் முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உலகளாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நடைமுறையில் உள்ள ஒரே ஜனநாயக பொறிமுறையாகும். அந்த பொறிமுறையை நாமும் உரத்து கேட்பது எமது விடுதலைக்கு மிகவும் இன்றியமையாதது.

இந்த செய்தியை சர்வதேச சமூகத்திற்கு அனுப்புவதற்கு, இந்த தேர்தலும் தமிழ் பொது வேட்பாளரும் தமிழ் மக்களுக்கு கிடைக்கின்ற ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

நாம் கேட்கும் பொதுவாக்கெடுப்பு ஒரு நீண்ட செயல்முறையாகும். தமிழர்களின் பொது வாக்கெடுப்பு கோரிக்கையை, சர்வதேச சமூகம் ஏற்கும்போது, ஐ.நா. இடைநிலை நிர்வாகம் தமிழர் தாயகத்திற்கு கொண்டு வரப்படும். வாக்காளர் தகுதி, புவியியல் எல்லை, வாக்குச்சீட்டின் உள்ள டக்கம், புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச வாக் களிப்பு மையங்கள் போன்ற அனைத்து விட யங்களிலும், சர்வதேச சமூகத்துடன் உடன்பாடு ஏற்படுத்தப்படும். மக்களுக்கு இதன் நன்மை தீமைகளை கற்பதற்கும், பிரச்சாரம் செய்வதற்கும் போதிய நேரம் ஒதுக்கப்படும். தமிழர் தாயகத் தில், எதுவிதமான அச்சுறுத்தலுமின்றி, சிங்களப் படைகளின் பிரசன்னமின்றி, ஐ.நா. அமைதி காக்கும் படையின் பிரசன்னத்துடன் பொது வாக்கெடுப்பு நடைபெறும். மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு, அவர்கள் விரும்பியபடி சுதந்திரமாக வாக்களிக்க சந்தர்ப்பம் உண்டாகும். மக்களின் கூட்டு முடிவு மதிக்கப்படும். இந்த சர்வதேச முறையின்படி, எமது சுயநிர்ணய உரிமை செயல் படுத்தப்படும். முழு செயல் முறையையும் செயல்படுத்த 2-5 ஆண்டுகள் ஆகலாம்.

எனவே, களத்தில் உள்ள மக்கள், பொது வேட்பாளரின் பின்னால் ஒன்றிணைந்து, சர்வதேச சமூகத்திற்கு தெளிவான செய்தியை வழங்குவதற்கு வாக்களிக்க வேண்டும். அதை வைத்து, புலத்தில் உள்ள தமிழ் மக்கள், சர்வதேச ரீதியில் பொதுவாக்கெடுப்புக்காக பிரச்சாரம் செய்து, எமது விவகாரத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல முடியும். களத்தில் கேட்காததை, புலத்தில் கேட்க முடியாது. எனவே, முதலில் களத்தில் உள்ள மக்கள், பொதுவாக்கெடுப்பு கேட்க்கின்றார்கள் என்கின்ற செய்தி வெளி உலகத்திற்கு கேட்க வேண்டும்.

செப்ரம்பர் 21 இல் நடைபெறப் போவது ஜனாதிபதித் தேர்தலே தவிர பொதுவாக்கெடுப்பு அல்ல. ஆகையினால் இந்த அணுகுமுறையில் நாம் தோற்பதற்கு இடமில்லை. ஒவ்வொரு வாக்கும் நமக்கு வெற்றிதான். இதன் முக்கிய நோக்கம், நமது மக்களில் ஒரு பகுதியினர் பொதுவாக்கெடுப்பில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதை உலகுக்கு காட்ட வேண்டும் என்பதுதான். ஆம், நாம் அதிக வாக்குகளைப் பெறும்போது, எங்கள் கோரிக்கை மேலும் பலப்படுத்தப்படும்.

இன்று நாம் நிற்கும் கட்டமான இராஜதந்திர மூலோபாயம் என்பது, களத்தில் உள்ள மக்களும், புலத்தில் உள்ள மக்களும் ஒத்துழைத்து ஒன்றாக செய்ய வேண்டிய வேலை. ஆனால் எங்களுக்கு இதில் வெவ்வேறு பாத்திரங்கள் உள்ளன. புலம் பெயர் மக்களும் இந்த பொதுவாக்கெடுப்பில் வாக்களித்து, எமது தாயகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தகுதியுடையவர்கள் என்பதால், அவர் களுக்கும், களத்தில் உள்ள மக்களுக்கு இருக்கும் அதே கடமையும், பொறுப்பும், உரிமையும், இந்த பொதுவாக்கெடுப்பு விடயத்தில் உள்ளது. இதில் இரு பகுதியினருக்கும் கூட்டுரிமை உண்டு.

ஆகவே, களத்தில் இருக்கும் எம் ஈழத் தமிழ் மக்களே! அரியநேத்திரன் வழங்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்! சங்கு சின்னத்திற்கு பெருவாரியாக உங்கள் வாக்கு களையிட்டு, எமக்கு பொதுவாக்கெடுப்பு வேண்டும் என்கின்ற மாபெரும் செய்தியை சர்வதேசத்திற்கு பலமாக கேட்கும் படியாக சரித்திரம் படையுங்கள்!! சர்வதேசப் பொறுப்பை மேற்கொண்டு செல்ல புலம்பெயர்ந்தோர் காத்திருக்கின்றார்கள்!!! எமது தேசியக் கடமை நமக்காக காத்திருக்கின்றது.

• • •

## நவாலியின் ... தொடர்ச்சி ...

சபையை நடத்திவருகின்றோம்.அதன் தலைவராகப் பணியாற்றினேன்.இதன் காரணமாக இடம்பெயர்ந்துவந்து எங்களுடைய கோயிலிலும் பள்ளிக்கூடத்திலும் தஞ்சம் அடைந்திருந்த மக்களுக்குத் தேவையான உணவு,குடிநீர் வசதிகளை வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்துகொடுத்தோம்.அவர்களது பசியை ஆற்றுவதற்காக முதல் கட்டமாக பாணும், சம்பலும் கொடுத்தோம். அதற்குப் பிறகு அவர்கள் அனைவருக்கும் மத்தியானச் சாப்பாடு வழங்குவதற்காகச் சமைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்காகப் புறப்பட்டோம்.அங்கே சமைத்துக் கொண்டிருந்த பொழுது,மேலும்மேலும் மக்கள் தாரைதாரையாக வந்து கொண்டிருந்தினம்.இதனால் அவைக்கும் சேர்த்துச் சமைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தோம்.அதேவேளை அவைக்குத் தேவையான ரொய்லற் வசதிகளையும், மருத்துவ வசதிகளையும், தங்குமிடவசதிகளையும் உடனடியாகவே ஏற்படுத்திக் கொடுத்தோம். நாங்கள் சமைத்துக் கொண்டிருந்த பொழுது, மேலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் பதற்றத்துடன் அங்கு வந்ததால், அவர்களது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, பெரிய கிடாரங்களில் சமையல் வேலையைச் செய்யத் தொடங்கினோம். அப்பொழுது நாலரை,ஐந்து முப்பது மணியளவில் ஒருவர் ஓடிவந்து,

"ஐயோ.... குண்டுகளைப் போட்டுட்டான்....எல்லோரும் விழுந்து படுங்கோ" என்று கத்திக் கொண்டிருந்தார். அவர் எச்சரித்துச் சிறிது நேரத்தில்,பாரிய சத்தத்துடன்,குண்டு விழுந்து வெடித்த பொழுது, எல்லா இடமும் ஒரே புகை மண்டலமாக இருந்தது. வானத்தைப் பார்த்த பொழுது விமானங்களில் இருந்து, சிறிய பேப்பர் துண்டுகள் வீச எறிய்பபட்டது பேர்லதான் இருந்தது. அதனைத் தொடர்ந்து நாங்கள் சமைத்துக் கொண்டிருந்த இடமெல்லாம் ஒரே புழுதியாகவும், மண்ணால் மூடப்பட்டும் இருந்தன.அந்தநேரம் ஒரேஅழுகுரலாகவே இருந்தன.இதில் யார்,யாரைப் பார்பபது என்று தெரியாமலேயே ஓலமிட்டோம். நாங்கள் ஓடிச்சென்று தேவாலய வாசலில் நின்று பார்த்துவிட்டு உள்ளே ஓடிப்போனோம். அங்கே பலர் படுகாயமடைந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தனர். அநேகமாக எல்லோருமே காயம் பட்டிருந்தனர். சிலருக்குக் கை கால்கள் இல்லை.சிலரின் தலைகள் கழுத்துடன் துண்டாடப்பட்டு இருந்தன. அவர்களில் பலர் இறந்து கிடந்தனர். அதற்குள்ளே காயப்பட்டிருந்தவர்களை ஒரு ராக்ரறில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு போதற்காக வெளியே போனபொழுது, பாதையெல் லாம் பெரிய மரங்கள் முறிந்து கிடந்ததால் ற்ராக்ரரினால் வெளியே செல்லமுடியவில்லை... அவற்றையும் எங்கடை பிள்ளைகள தான் அப்புறப்படுத்தி அந்த வாகனங்கள் வெளியே செல்வதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.ஓரளவு காயப்பட்டவர்களைச் சைக்கிளிலும் ஏற்றிக் கொண்டு போனார்கள்......இவ்வளவு நேரங்கடந்தும் வீட்டில் இருந்த எனது மகளைப் பற்றிச் சிந்திக்கவில்லை....எனக்கு அவ ஒருத்திதான் மகள்.சிறிது நேரத்தில் என்னைத் தாண்டிக் கொண்டு சென்றவர்கள் எனக்கு நேரடியாகச் சொல்லாமலேயே அவவின்ரை மகள்தான் தென்னை மரத்துக்குக்கீழே இறந்து கிடக்கின்றா என்று எனது காதுகேட்கக் கூறிக் கொண்டே போனார்கள். அதற்குப் பிறகுதான் இந்தக் குண்டுவெடிப்பில் எனது மகளும் இறந்து போனது தெரியவந்தது. அந்தநேரம் எனக்கு அஞ்சும்கெட்டு அறிவும்கெட்டது போல் போய்விட்டது. நான் உடனடியாகவே அலறித் துடித்துக்கொண்டு மகள் இறந்து கிடப்பதாகக் கூறிய இடத்திற்குப் போய்ப்பார்த்தேன். அங்கே என்ரை மகளும் தென்னை மரங்களுக்குக் கீழ் இறந்து கிடந்தா....." என்று இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு மாதத்திற்குப் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் பேட்டி கண்டபொழுது, இதனைக் கூறினார்.

தாக்குதல் நடந்த இடத்தில் மறுநாள் காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் அங்கே நடைபெற்ற சேதத்தை மதிப்பீடு செய்தனர்.குண்டுவீச்சில் கொல்லப்பட்டவர்களின் பல சடலங்கள் இடிபாடுகளில் இருந்து இன்னும் அகற்றப்படவில்லை.செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழு ஜூலை மாதம் 11ஆம் திகதி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபொழுது, இலங்கை விமானப் படையால் குண்டுவீசப்பட்ட தேவாலயத்தின் இடிபாடுகளுக்கு அடியில் கண்டுபிடிக்கப்பட்ட 165 உடல் களில் 13 குழந்தைகளும் அடங்குவதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்தது.

**தொடரும்...**

## மேற்கு கரை ... தொடர்ச்சி ...

இஸ்ரேலிய படையினர் படுகொலை செய்ததாக நோயாளர் காவு வண்டியின் சாரதி ஒருவர் அல்ஜசீரா ஊடகத்திற்கு தெரி வித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டுக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் இந்த மிகப்பெரும் படை நடவடிக்கை இடம்பெறும் பகுதியில் 80,000 பொதுமக்கள் வாழ்கின்றனர். காசாவில் இஸ்ரேல் தாக்குதலை கடந்த ஒக்டோபர் மாதம் ஆரம்பித்த பின்னர் மேற்கு கரை மீது இஸ்ரேல் பல தடவைகள் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தது எனினும் தற்போது அது மிகப்பெரும் படை நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

காசாவில் போர் ஆரம்பித்த பின்ளனர் இஸ்ரேலிய படையினரும், சட்டவிரோத இஸ்ரேலிய குடியேற்ற வாசிகளும் மேற்கு கரைப் பகுதியில் 646 பொதுமக்களை படுகொலை செய்துள்ளனர். அவர்களில் 148 பேர் சிறுவர்கள், 5,400 பேர் காயமடைந்துள்ளனர். பெருமளவான வீடுகளும் அழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் உள்ளது.

## மலையக அபி ... தொடர்ச்சி ...

ஒரு சமூகமாகவே மலையக மக்கள் இருந்து வருகின்றனர்.மலையக மக்கள் 'இலங்கையர்' என்ற பொது வரையறைக்குள் உள்ளீர்க்கப்படாது இன்னும் பல சந்தர்ப்பங்களில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே வழிநடத்தப்பட்டும் வருகின்றனர்.

மலையகம் பல்வேறு சவால்களையும் இப்போது சந்தித்து வருகின்றது.அரசியல், சமூகம், பொருளாதாரம் எனப்பலவும் இதில் உள்ளடங்கும்.இச்சவால்களை வெற்றி கொள்வதற்கு அர்ப்பணிப்பும் செயலாற்றலும் மிக்க தலைமைத்துவம் மிகவும் அவசியமாக வுள்ளது

மலையகம் தடம்புரண்டு போயுள்ள நிலையில் மக்களை ஐக்கியப்படுத்தவும் மலையகத்தை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவும் முன்னுதாரணம் மிக்க தலைவர் ஒருவர் அவசியமாகும்.இத்தகைய ஒருவர் அரசியல் மற்றும் கட்சி பேதங்களுக்கு அப்பால் சமூகத்தின் எழுச்சி குறித்து சதா சிந்தித்து செயற்படுகின்ற ஒருவராக இருக்க வேண்டும்.தனி மனித குரோதங்கள், கட்சிப் பிரச்சினைகள் செயற்பாடுகளில் ஆதிக்கம் செலுத்தக் கூடாது. இந்நிலையில் அரசியல்கட்சி பேதங்களுக்கு அப்பால் சமூகத்தைப் பற்றி சிந்திக்கின்ற தலைவர்களையே மக்கள் முதன்மைப்படுத்த வேண்டும்.

இதேவேளை தலைவர்கள் தூரநோக்கு மிக்கவர்களாக இருப்பதும் அவசியமாகும். இந்த தூரநோக்கு தன்மையானது பின்தங்கிய சமூகங்கள் பலவற்றை முன்னிலைக்கு கொண்டு வந்துள்ளது.எனவே மலையக அரசியல்வாதிகள் காழ்ப்புணர்ச்சி, முறுகல் என்பவற்றுக்கு முற்றுப் புள்ளி வைத்து பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் கைகோர்க்க வேண்டும் என்றார்.

## தமிழ் பொது ... தொடர்ச்சி ...

செல்ல முடியாது எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் கஜேந்திரன் எம்.பி., அஜித் டோவலி டம் எடுத்துரைத்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையுடன்கூடிய சமஷ்டி முறைமையை வென்றெடுப்பதற்கு இந்தியா உதவ வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை குறித்தும், தேர்த லில் தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கான தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் தீர்மானம் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன.

இத்தகைய மாறுபட்ட நிலைப்பாடுகள் தொடர்பிலும், தமிழ் மக்களின் வாக்குவீதம் குறித்தும் கேட்டறிந்த அஜித் டோவல், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்து நின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்தது என்று ஆலோசனை வழங்கினார்.

அத்தோடு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் எத்தகைய தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தான் கூறப்போவதில்லை என்று குறிப்பிட்ட அவர், இருப்பினும் இத்தகைய தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகள் ஜனநாயகத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது குறித்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தமிழ் பொது வேட்பாளர் தமிழ் மக்கள் சார்பில் நிறுத்தப்படுவது பிராந்திய நாடுகளையும், இலங்கை அரசையும் மிகப்பெரும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியதையே டோவலின் அவசர பயணம் காண்பித்துள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## உலகத்தை ... தொடர்ச்சி ...

எச்சரிக்கையின் கால எல்லை போன்ற காரணகிள் அங்கு கருத்தில் எடுக்கப் பட்டன.

எச்சரிக்கை கால எல்லை ஒரு வாரமாக இருப்பின் அதற்கு சிறந்த பாதுகாப்பு நடவடிக்கையாக அணுவாயுதமே இருக்கும். எனவே உலகளாவிய ரீதியில் நாடுகள் இணைந்து ஒரு அணுவாயுத பாதுகாப்பு பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

விண்கற்களை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளும் வடிவமைக்கப்பட வேண்டும். அணுவாயுதங்களை விண்வெளியில் 10 ஆண்டுகளுக்கு மேல் நிலையாக வைத்திருக்கும் அல்லது சுழற்சியில் வைத்திருக்கும் பொறிமுறைகளும் உருவாக்கப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈழத்தைச் ... தொடர்ச்சி ...

கடந்து வந்துள்ளோம். இதோ இன்று இன் னொரு இளைஞன். இன்றைக்கு போராடிக் கொண்டிருக்கும் பல தமிழ் அகதிகள் போல் பாதுகாப்பற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு ஒவ்வொரு நாள் விடியலையும் தங்களுக்கு மாற்றம் ஏற்பட்டு விடும் என்று கனவுகளோடு; இங்கிருந்து ஆபத்து நிறைந்த தங்கள் நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டு விடுவோமோ என்ற பயத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் பல அகதிகளின் ஒருவரின் மரணம் இது." என்று கூறியுள்ளார்.

### தென்னிலங்கை ... தொடர்ச்சி ...

யைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். காணாமற் போனவர்கள் தொடர்பான நவாஸ் ஆணைக் குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு சுயதொழில் ஆரம்பிப்பதற்கான நிதியுதவி வழங்கப்படும் என்பன போன்ற உறுதி மொழிகளே வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் தேர்தல் விஞ்ஞாபனம் வியாழக்கிழமை கண்டியில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களுக்கு கைளிக்கப்பட்ட பின்னர் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் ஊடாக பொது மக்களுக்கு வெளியிட்டு வைக்கப்பட்டது.

“சகலருக்கும் வெற்றி” என்ற வெளியிடப்பட்ட அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்கான வாக்குறுதிகளாக தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய நாடாளுமன்ற முறைமைக்கு மாற்றப்படும். புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை, 13ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். அரசியலமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியினால் ஒருதலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்பவையே வழங்கப்பட்டுள்ளன.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான நாம ராஜபக்ச ஏற்கனவே வடக்கு, கிழக்கு ஒருபோதும் இணைக்கப்படாது, காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு ஒருபோதும் வழங்கப்படாது என தனது கன்னிப் பிரசார மேடையிலேயே அறிவித்து விட்டதனால், ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பில் தமிழ் மக்களும் தமிழ்க் கட்சிகள் சிலவும் பெரும் எதிர்பார்ப்பை வைத்திருந்த நிலையிலேயே அவர்களும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடும் அதேவேளையில், நான்கு பிரதான வேட்பாளர்களும் களமிறங்கியிருக்கின்றார்கள். இந்த நிலையில், தமிழ் மக்களுடைய வாக்குகளே தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பின்னணியில் தான் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில், சஜித், அநுர ஆகியோர் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அதிகளவு விஜயங்களை கடந்த சில மாதங்களாக மேற்கொண்டிருந்தார்கள். பல வாக்குறுதிகளையும் வழங்கியிருந்தார்கள். தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் என்ன என்பதையும் பல்வேறு தரப்பினருடனான சந்திப்புக்களின் மூலமாக அவர்கள் அறிந்திருந்தார்கள்.

தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் போன்றவர்கள் பிரதான வேட்பாளர்களின் விஞ்ஞானங்கள் வெளிவந்ததன் பின்னர்தான் தமது கட்சியின் முடிவு அறிவிக்கப்படும் என்று கூறிவந்தார். ஆனால், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்துக்கு ஆதரவு அதிகரித்து வரும் நிலையில், தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளைகள் ஒவ்வொன்றாக பொது வேட்பாளரை ஆதரிக்க முடிவெடுக்கின்றன. அவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுக்காவிட்டால், அடுத்து வரப்போகும் தேர்தல்களில் தமது நிலை எவ்வாறிருக்கும் என்ற அச்சம் அவர்களுக்கு உருவாகியிருக்கின்றது. இந்த நிலையில் ரணில், சஜித், அநுர ஆகியோரின் விஞ்ஞானங்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை களமிறக்க எடுக்கப்பட்ட முடிவு மிகவும் சரியானது என்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றது.

• • •

### பாலஸ்தீன ... தொடர்ச்சி ...

ஒப்படைக்க அது மறுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளர்.

இந்த திருட்டு தொடர் பில் மேன் முறையீடுகள் பல செய்யப்பட்டபோதும் அவை அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளன. தமது பணத்தை பறிகொடுத்த மக்களுக்கு பைனான்ஸ் நிறுவனமும் இஸ்ரேலிய அதிகாரிகளும் இணைந்து வழங்கிய கடிதங்களையும் யூசெப் ஆதாரமாக சமர்ப்பித்துள்ளார்.

எனினும் தாம் குறிப்பிட்ட கணக்குகளில் உள்ள பணத்தை மட்டுமே கையகப்படுத்தியுள்ளதாக பைனான்ஸ் நிறுவனம் கடந்த புதன் கிழமை(28) தெரிவித்துள்ளது.

பைனான்ஸ் நிறுவனத்தின் இந்த நடவடிக்கை உலக மக்களிடம் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தீவிரவாதம், சட்டவிரோத பணபரிமாற்றம் போன்ற காரணங்களை முன்வைத்து மேற்குலக நாடுகள் தமது நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்படும் வேற்று இனத்தவரின் பணங்களை எதிர்காலத்தில் திருடி தமது பொருளாதார வீழ்ச்சியை சரிசெய்யலாம் என்ற கருத்துக்களும் எழுந்துள்ளன.

ரஸ்யாவின் 300 பில்லியன் டொலர்களை திருடியது போல பல நாடுகளின் நிதி வளம் திருடப்படலாம் என்பதால் சீனா போன்ற நாடுகள் மேற்குலக நாடுகளின் வங்கிகளில் உள்ள தமது பணங்களை மெல் மெல்ல வெளியில் எடுத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### எந்த சமூக ... தொடர்ச்சி ...

ரெலிகிராம் சமூகவலைத்தளம் கூட பாதுகாப்பானது என நாம் கருதவில்லை என ரெலிகிராம் சமூகவலைத்தளத்தின் பிரதம அதிகாரியும், நிறுவுனருமானபாவல் டுரோவ் பிரான்ஸ் அரசினால் கைது செய்யப்பட்டது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது பெஸ்கோவ் கடந்த செவ்வாய்க்கிழமை(27)தெரிவித்துள்ளார்.

அசர்பைஜானில் இருந்து பிரான்ஸிற்கு தனது தனிப்பட்ட விமானத்தில் சென்ற சமயம் கடந்த சனிக்கிழமை(24) டுரோவ் பிரான்ஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அவர் மீது சிறுவர் துஸ்பிரயோகம், போதைப் பொருள் கடத்தலுக்கு உதவியமை போன்ற குற்றச்சாட்டுக்களை பிரான்ஸ் அரசு முன்வைத்துள்ளது. இதனிடையே, ரெலிகிராம் சமூகவலைத்தளத்தில் இருந்து தகவல்களை மேற்குலக நாடுகள் பெறமுடியாமையே இந்த கைதுக்கான உண்மையான காரணம் என ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லாரோவ் தெரிவித்துள்ளார்.

தகவல்களை பெற்று அதன் மூலம் ஏனைய நாடுகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான மேற்குலகத்தின் முயற்சி இது. அடிப்படை பேச்சுரிமையை மீறும் செயல் இது எனவும், கைதின் பின்னியில் அமெரிக்கா உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### நல்லாட்சி ... தொடர்ச்சி ...

பெற்றுக் கொண்டனர். மறைந்த தலைவர் இரா. சம்மந்தன் அவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சி தலைவராக நல்லாட்சி அரசாங்கத்தில் செயற்பட்டவர்.

இவர்களுக்கான பல திட்டங்களை அரசாங்கம் வழங்கியது கம்பரெலிய உட்பட வீடமைப்பு திட்டங்களையும் நடை முறைப்படுத்தினார்கள். தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட துரைரட்ணசிங்கம் அவர்கள் அப்போது தமிழ் பேசும் மக்களுக்காக இந்த திட்டத்தை அரசாங்கத்துடன் இணைந்து மக்களுக்காக பெற்றுக் கொண்டார்.

சிறுபான்மை இன மக்களுக்கான அபி விருத்திகள் உட்பட சகல விதமான திட்டங்களிலும் பாகுபாடு காட்டப்பற்று இடை நிறுத்தப்படுவதும் அழிக்க முனைவதும் சிலரின் வங்குரோத்து அரசியலாக காணப்படுகிறது.

எனவே ஒட்டு மொத்த சமூகத்தின் இருப்புக்காக சிறுபான்மை கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் ஒன்றினைந்து கைவிடப்பட்ட திட்டங்களை ஆரம்பித்து பூரணமாக்க ஒன்றினைந்து செயற்படுவோம்.

நல்லாட்சி ... தொடர்ச்சி ...

பெற்றுக் கொண்டனர். மறைந்த தலைவர் இரா. சம்மந்தன் அவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சி தலைவராக நல்லாட்சி அரசாங்கத்தில் செயற்பட்டவர்.

இவர்களுக்கான பல திட்டங்களை அரசாங்கம் வழங்கியது கம்பரெலிய உட்பட வீடமைப்பு திட்டங்களையும் நடை முறைப்படுத்தினார்கள். தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட துரைரட்ணசிங்கம் அவர்கள் அப்போது தமிழ் பேசும் மக்களுக்காக இந்த திட்டத்தை அரசாங்கத்துடன் இணைந்து மக்களுக்காக பெற்றுக் கொண்டார்.

சிறுபான்மை இன மக்களுக்கான அபிவிருத்திகள் உட்பட சகல விதமான திட்டங்களிலும் பாகுபாடு காட்டப்பற்று இடை நிறுத்தப்படுவதும் அழிக்க முனைவதும் சிலரின் வங்குரோத்து அரசியலாக காணப்படுகிறது.

எனவே ஒட்டு மொத்த சமூகத்தின் இருப்புக்காக சிறுபான்மை கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் ஒன்றினைந்து கைவிடப்பட்ட திட்டங்களை ஆரம்பித்து பூரணமாக்க ஒன்றினைந்து செயற்படுவோம்.



## பூகோள வெப்... தொடர்ச்சி...

சுவரைக்கட்டுவதற்கான நிதி பற்றிய முடிவுக்காக 7 வருடங்கள் இம்மக்கள் காத்திருந்திருக்கிறார்கள்.

முடிவுகள் எடுப்பதிலுள்ள தடைகள், இதன் சிக்கல்தன்மை, இது ஒரு சிறிய தீவாக இருப்பதனால், இதன் அவசரத்தன்மை உணரப் படாதிருத்தல், அபிவிருத்தியடைந்து வரும் இந் தச் சிறிய நாடுகளுக்கு உதவக்கூடிய வகையில் நிதிக்கட்டமைப்புகள் இல்லாதிருத்தல் போன்ற விடயங்களை செயலர் நாயகம் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.



அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளால் பயன்படுத்தப்படக்கூடிய நிதியை அதிகரிப் பது தொடர்பாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டி ருக்கின்றன. ஆனால் உண்மை என்னவென்றால் இந்த நாடுகளுக்கு இந்த நிதி போதுமனாதல்ல என்பதாகும்.

இந்த மாநாட்டில் பங்குபற்றும் பல பசி பிக் நாடுகளைக் சேர்ந்தவர்கள் பிரதேச ரீதியாக பெருநிதி வழங்குபவரும் அதே நேரத்தில் அதே நேரத்தில் அதிகமான காபனீரொட்சைட்டை வெளி யிடுவதற்குக் காரணமாக இருக்கின்ற அவுஸ் திரேலியாவை நோக்கியே சுட்டுகிறார்கள்.

படிம எரிபொருள் பாவனையைக் குறைக்கு மாறு குரல்கள் அதிகரித்திருக்கும் இந்த நேரத்தில், 2050 ஆண்டுவரையும் படிம எரிபொருளை எடுக்கும் பணி மும்முரமாக நடைபெறும் என்று அவுஸ்திரேலியப் பிரதமர் அன்ரனி அல்ப னேசே இவ்வருடத்தின் ஆரம்பத்தில் குறிப் பிட்டிருந்தார்.



அவுஸ்திரேலியா பிரதேச ரீதியாக பெரு மளவில் கரியமிலவாயுவை வெளியேற்றும் நாடுகளுக்கு உங்கள் செய்தி என்ன? என்று பிபிசி கேட்டதற்கு, "பெருமளவில் மாசுபடுத்தும் நாடு களுக்கு அதற்கேற்ப பெரும் பொறுப்பு இருக்கிறது" என்று செயலர் நாயகம் தெரிவித்தார்.

அப்படியில்லாவிட்டால், 2015ம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப் பட்டது போல, 1.5 செல்சியஸ் என்ற புள்ளி யில் வெப்பநிலையைப் பேணுவது என்று எடுக் கப்பட்ட முடிவை மீறுவதாகவே இருக்கும். இந்த நூற்றாண்டின் முடிவில் பூகோள வெப்ப மாதலை 2 சென்ரிகிரேட்டுக்குள் கட்டுப்படுத்தி வைப்பதே மேற்குறிப்பிட்ட பாரிஸ் உடன் படிக்கையின் முக்கிய குறிக்கோள் ஆகும். அதுவரை பாதுகாப்பான எல்லையாகிய 1.5 செல்சியஸைப் பேணுவதும் இந்த உடன்பாட்டின் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

"பூகோள வெப்பமாதலை 1.5 செல்சியஸ் என்ற எல்லைக்குள் வைத்திருந்தால் மட்டுமே கிரீன்லாந்து மற்றும் மேற்கு அன்ராட்டிக் ஆகியவற்றிலுள்ள பனித்தட்டுகள் உருகி அதனால் ஏற்படக்கூடிய மிகப் பாதகமான விளைவுகளைத் தடுத்து நிறுத்த முடியும்" என்று குற்றெர்றேஸ் சுட்டிக்காட்டினார். அப்படியென்றால், பூகோள வாயு வெளியேற்றத்தை 2019ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2030ம் ஆண்டளவில் 43 வீதமாகக் குறைப்பதும், 2035ம் ஆண்டில் 60 வீதமாகக் குறைப்பதும் ஆகும். ஆனால் கடந்த வருடமோ பூகோள வாயு வெளியேற்றம் 1 வீதத்தால் அதிகரித்திருக்கிறது.

"வாயுவெளியேற்றத்தின் 80 வீதத்துக்குக் காரணமாக இருக்கின்ற ஜி 20 நாடுகளுக்கு முக்கியமான கடமை ஒன்று இருக்கிறது. அவர் கள் அனைவரும் ஒன்றுபட்டு பூகோள வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்." என்று குற்றெர்றேஸ் மேலும் குறிப்பிட்டார்.

பூகோள வாயுவெளியேற்றத்துக்குக் காரண மான ஜி 20 நாடுகளையும் மற்றும் பெருநிறுவ னங்களையும் இவ்விடயத்தில் மையப்படுத்திய செயலர் நாயகம், தற்போதைய நிலைமையை மாற்றியமைப்பதில் இவர்களுக்கு பெரும் பொறுப்பும் பங்கும் இருக்கிறது என்பதை வலியுறுத்தினார். "இனிமேலும் நாங்கள் பொறுமை காக்க முடியாது."

**நன்றி: பிபிசி**

## தோல்வியடை... தொடர்ச்சி...

பாகிஸ்தானுக்கும் அழைப்பு அனுப்புவதையும் தவிர்திருந்தது. அந்த கூட்டத்தில் 123 நாடுகள் பங்குபற்றியருந்தன. ஆனால் ஆசிய பிராந்தியத்தின் முக்கிய நாடுகளான சீனா மற்றும் பாகிஸ்தானுக்கு அழைப்பு அனுப்பாதது பலரையும் ஆச்சரியப்பட வைத்திருந்தது. அதுவும் அமெரிக்காவை சாந்தப் படுத்தும் முயற்சி தான்

ஆனால் அதேசமயம், ரஸ்ய கடற்படையின் பிரதான கட்டளை அதிகாரியான அலக்ஸ்சாண்டர் மொய்சீவ் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டு இந்திய கடற்படைத்தளபதி உட்பட பல உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இரு நாட்டு கடற்படையினரும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது ஆளுமையை அதிகரிக்கும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்த தாகவும், இரு கடற்படையினரும் இணைந்து செயற்படுவது தொடர்பிலும் இந்த சந்திப்பில் பேசப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரி வித்துள்ளன.

இந்திய கடற்படையின் பலத்தை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகரிக்கும் நோக்கத்து டன் இரண்டு பிரிகேற் வகை கடற்படைக் கப்பல்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கு ரஸ்யா திட்டமிட்டுள்ளது. முதலாவது கப்பல் அடுத்த மாதமும் மற்றுமொரு கப்பல் எதிர்வரும் வருடத்தின் முற்பகுதியிலும் வழங்கப்படவுள்ளன. மேலும் இரண்டு கப்பல்களை இரு நாடுகளும் இணைந்து கட்டவுள்ளன.

அதேசமயம் இந்தியாவினால் 5.43 பில்லி யன் டொலர்கள் செலவில் கொள்வனவு செய் யப்பட்ட நான்கு எஸ்-400 வான்பாதுகாப்பு ஏவுகணைத் தொகுதிகளில் இரண்டு மிக விரைவில் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளதாக ரஸ்யா தெரிவித்துள்ளது. ஏற்கனவே இரண்டு இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அதேசமயம், பங்களாதேசத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிற்கு இந்தியாவே காரணம் என பங்களாதேசம் குற்றம் சுமத்தியுள்ளதுடன், டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் இந்தியாவுக்கு எதிராக ஊர்வலம் ஒன்றையும் நடத்தியிருந்தனர். பங்களாதேசமும் இந்தியாவும் 54 நதிகளை பகிர்ந்து பயன்படுத்தி வருகின்றன. ஆனால் ஹசீனாவின் வெளி யேற்றத்திற்கு பழிவாங்கும் நோக்கத்துடன் இரவோடு இரவாக பங்களாதேசத்திற்கு அறி விக்காமல் இந்தியா நதியின் அணைக்கட்டை திறந்துவிட்டதாக பங்களாதேசம் குற்றம் சுமத்தி யுள்ளது. எனினும் இந்தியா அதனை மறுத்துள்ளது. இந்த அனர்த்தத்தில் 45 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளதுடன், பலர் இறந்தும் உள்ளனர்.



இந்த அனர்த்தத்தை தொடர்ந்து இந்தியாவில் பணியாற்றிய பங்களாதேசத்தின் தூதரக அதி காரிகள் இருவரை இந்த வாரம் பதவியில் இருந்து பங்களதேசத்தின் புதிய அரசு நீக்கியுள்ளது. அவர்கள் ஹசினாவின் ஆதரவாளர்கள் எனவும் இந்தியாவுக்கு துணைபோவதாகவும் பங்களா தேசம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதனிடையே, புதுடில்லியில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் கடந்த திங்கட் கிழமை காஸ்மீருக்கு சென்று கஸ்மீர் அரசியல் தலைவர்களை சந்தித்துள்ளனர். 2019 ஆம் ஆண்டு கஸ்மீரின் காணி அதிகார உரிமை சட்டமான சரத்து 370 ஐ இந்திய அரசு நீக்கியதுடன், பல முன்னனி அரசியல் தலைவர்களை வீட்டுக் காவலிலும் வைத்திருந்தது. ஆனால் தற்போது அமெரிக்கத்தூதுவர் அங்கு சென்றது என்பது சீனாவின் எதிர்ப்பையும் மீறி அடிக்கடி தாய்வானு க்கு செல்லும் அமெரிக்க அதிகாரிகளின் நிலையை ஒத்ததாகும்.



அதாவது இந்தியாவை சீனாவுடன் ஒரு போருக்குதள்ளுவதற்கான அழுத்தம் இது என பலர் தெரிவிக்கின்றனர். அதிலும் குறிப்பாக இந்தியா இலங்கை போன்ற நாடுகளின் அணிசேராத கொள்கை என்ற வெளிவிவகாரக் கொள்கை வருங்காலத்தில் பயன்தாராது என்பதையே இது காட்டுகின்றது. அணிசேராத கொள்கை என்ற இந்தியாவின் நாடகம் முடிவடைவதற்கான உச்சக் கட்ட காட்சிகள் அரங்கேற ஆரம்பித்துள்ளன. இது பக்கத்தில் உள்ள இலங்கை என்ற நாட்டுக்கும் பொருந்தும்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.



# "ஏன் இன்னும் அவர்கள் வரவில்லை?"

## கடந்த 15 வருடங்களாக தமது உறவுகளை தேடும் போராட்டத்தில் உறவினர்கள்











